Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா   செய்தி: 021 493 0000   விளம்பரம்: 021 493 1111

சுடர் ... ர் :109   பங்குனி 04ஆம் நாள் செவ்வாய்க்கிழமை   17 மார்ச் 2020   வள்ளுவர் ஆண்டு 20...



"இதென்னடா, கிரிக்கெட் ஸ்கோரை விட கொரோனா ஸ்கோர் கூடிக் கொண்டே போகுதே!..."

## கொரோனா தொற்று இதுவரை 28

### நேற்று மட்டும் 10 பேர் இனங் காணப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 17

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 10 பேர் நேற்றும் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட் 05

# தேர்தலை பிற்போடுக

## அரசிடம் கூட்டமைப்பு அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளமையால் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலைப் பிற்போடுமாறு அரசிடம் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசர கோரிக்கை விடுத்துள்ளது. 05

## அனைத்து பரீட்சைகளும் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 17

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்த பல பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் 05

## அ.அட்டை வழங்கும் ஒருநாள் சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 17

மறு அறிவிப்பு வரை தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான ஒரு நாள் சேவை இன்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக 05

## லைசென்ஸ் வழங்கல் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 17

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்படுவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சாரதி அனுமதிப் 05

வெளிநாட்டிலிருந்து வந்த

## குடும்பத்தை அள்ளி சென்றது பொலிஸ்!

### கொரோனா பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்ப்பிப்பு

வவுனியா, மார்ச் 17

வெளிநாட்டில் இருந்து வந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்த குடும்பம் ஒன்று கொரோனா மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் வவுனியா, இராசேந்திரகுளத்தில் நேற்று முற்பகல் நடந் 05

## கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 17

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் பரிசோதனைகளின் பின்னர் வீடுகளுக்குத்திரும்பியுள்ளனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

அவர்களுக்குக் 05

## 40 பேருக்கு வலைவீச்சு!

கொழும்பு, மார்ச் 17

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான போலிச் செய்திகளைப் பரப்பிய 40 பேர் தொடர்பான விவரங்கள் கிடைத்துள்ளன என்றும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பதில் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். 05

## போலிகளிடம் ஏமாறாதீர்கள்

### அறிவுறுத்துகின்றது ஆயுர்வேத திணைக்களம்

கொழும்பு, மார்ச் 17

கொரோனா வைரஸைக் குணப்படுத்துவதாகத் தெரிவித்து இணையத்தளங்களில் வெளியாகும் ஆயுர்வேத மருத்துவக் குறிப்புக்கள் தொடர்பான தகவல்களை நம்ப வேண்டாம் என 05

## 3 நாள்களுக்கு பொதுவிடுமுறை

விரிவு - பக்.05

## வெளிநாட்டிலிருந்து வந்தோர் விவரங்கள் திரட்டப் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வெளிநாடுகளில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு வந்தவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டுமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து 05

## சிறுமி துஷ்பிரயோகம்: சந்தேகநபர் மறியலில்

வவுனியா, மார்ச் 17

பதின்ம வயதுச் சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் வவுனியாவில் நடந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் 33 வயதுடையவர் என்றும், அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். 05

## காணிப்பிணக்கால் 5 பேர் சிகிச்சையில்

மன்னார், மார்ச் 17

இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒரு சிறுமி மற்றும் மூன்று பெண்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை மன்னார், பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது.

மன்னார் நீதிவான் நீதிமன்றில் காணி தொடர்பான வழக்கு ஒன்று தீர்ப்புக்காக உள்ள நிலையில் அது தொடர்பாக ஏற்பட்ட கைகலப்பிலேயே இவர்கள் காயமடைந்துள்ளனர் 05

இன்று முதல்
தினமும் மாலை 3 மணிக்கு
உங்கள் கரங்களில்
சுட்டெரிக்கும் உண்மைகளுடன்
சுடர் ஒளி
THE SUDAR OLI
சுடர் ஒளி
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்...



## பொது விடுமுறையால் முடங்கியது மன்னார்

மன்னார், மார்.17

கொரோணா வைரஸ் தொற்று காரணமாக அரசாங்கம் அறிவித்த பொது விடுமுறையால் மன்னார் நகரம் முழுவதும் நேற்று வெறிச்சோடியது.

அண்மையில் சீனாவில் ஆரம்பிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகின் பல நாடுகளை அச்றுத்தலுக்கு உள்ளாக்கி பல ஆயிரக் கணக்கான உயிரிழப்புக் களையும் ஏற்படுத்தியிருந்தது. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இலங்கையிலும் அடையாளம் காணப்பட்டதால் வைரஸ் தொற்று மேலும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத் திணைக்களம், சுகாதார அமைச்சு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தன. அதன்படி அண்மையில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. நேற்றைய நாளை அரச பொது விடுமுறைநாளாக அறிவித்தது. இதனால், மன்னார் மாவட்டச் செயலம் மற்றும் பிரதேச செயலகங்கள் தபால்நிலையங்கள் இயங்கவில்லை. அத்துடன் மன்னார் நகருக்கு பொதுமக்களின் வருகை மிகவும் குறைந்து காணப்பட்டது. பேருந்துகளிலும், இருக்கைகளில் மட்டுப்படுத்தப்பட்ட பயணிகளையே காணமுடிந்தது. அதிகாலையில் திறக்கப்பட்டிருந்த வியாபார நிலையங்கள் வியாபார நடவடிக்கைகள் நடைபெறாததால் மூடப்பட்டன.

(ப-213)

# பொது இடங்களில் கூடுவதை தவிர்க்கவும்

## சாவகச்சேரி பிரதேச சபை அறிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 17

கொரோனா தொற்று ஏற்பட்ட அபாய சூழ்நிலை காரணமாக அனைத்து பிரதேசங்களிலும் கூட்டம் கூடுவதை தவிர்க்குமாறு சாவகச்சேரி பிரதேச சபையால் நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மூலமாகவோ அல்லது வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டவர்களாலேயோ கொரோனா எம்மை வந்தடையலாம். எனவே அண்மையில் வெளி நாடுகளிலிருந்து வந்தவர்கள் அல்லது வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டவர்கள் தொடர்ச்சியாக 14 நாள்கள் வெளி இடங்களுக்கு செல்லாமல் வீடுகளில் அல்லது தங்குமிடங்களில் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் அல்லது வீட்டில் இருப்பவர்களுக்கு காய்ச்சல் இருமல் தடிமல் தொண்டையில் வேதனை தலைவலி அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அல்லது அருகாமையில் உள்ள அரசாங்க மருத்துவமனைக்கு அல்லது சுகாதார மருத்துவ அதிகாரியிடமோ செல்லுமாறு அறிவிக்கப்பட்டது.

காலத்தின் தேவை கருதி இயலுமானவரை மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில், பொது வைபவங்களில், பேருந்து புகையிரத போக்குவரத்துகளில் திருமண மண்டபங்களில் ஒன்று கூடுதல் ஆகியவற்றைத் தவிர்க்குமாறு ஒலிபெருக்கி மூலம் கொடிகாமம் நகர் பகுதியில் அறிவிக்கப்பட்டது.

(ஐ-159)

## வழிபாடு, நிகழ்வுகளை நிறுத்தவும்

### ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 17

'கொரோனா' வைரஸ் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் வடக்கு மாகாணத்தில் ஆலயங்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களில் நடைபெறும் பொதுமக்கள் ஒன்றுகூடும் மேலதிக விஷேட நிகழ்வுகளை, விழாக்களை, வைபவங்களை ஏற்பாடு செய்து நடத்துவதை மறு அறிவித்தல்வரும்வரை தவிர்க்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தக் கோரிக்கை சைவ ஆலயங்களின் நிர்வாகங்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல் நிர்வா கங்களிடம் விடுக்கப்பட்டுள்ளது.

(து)

## ஏ.எல். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, மார்ச் 17

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்காக இணையத்தள மூலம் விண்ணப்பிக்கும் கால எல்லை மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். ஒரு நாள் சேவையின் கீழ் பரீட்சை பெறுபேறுகளை பெறும் வேலைத்திட்டம் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ,5)

## நீதிமன்ற நடவடிக்கை மட்டுப்படும்

கொழும்பு, மார்ச் 17

நாடு முழுவதும் நீதிமன்ற நடவடிக்கைகளை இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மட்டுப்படுத்துவதாக நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த வாரத்துக்குரிய வழக்குகள் அனைத்தும் ஏப்ரல் முதல் வாரத்துக்கு மாற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொரோனா அச்சம் நிலை காரணமாக நாடு முழுவதும் நீதிமன்ற நடவடிக்கைகளை இந்தவாரம் இடைநிறுத்துமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வாரம் இடைநிறுத்துமாறு

(ந,ஒ,5,105)

# கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

நல்லூர்பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதேச சபையின் தவிசாளர் த. தியாகமூர்த்தி தலைமையில் நேற்று சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் போன்றோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பிரதேச சபை முழுமையான ஒத்துழைப்பை சுகாதாரப் பிரிவுக்கு வழங்கவுள்ளது.

இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவும் நேற்று முதல் உடனடியாக ஆரம்பிப்பதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்களைக் காப்பாற்றும் முன்னெச்சரிக்கையாக மக்களுக்குக் துண்டுப்பிரசுரங்களை வழங்குவது, கிராமங்கள் தோறும் ஒலி பெருக்கி மூலம் அறிவித்தல்களை மேற்கொள்வது மற்றும் ஏனைய செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகள் யாவும் நேற்றில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ-17)

## அருங்காட்சியகங்களும் மூடப்படுகின்றன

கொழும்பு, மார்ச் 17

அருங்காட்சியகதிணைக் களத்துக்கு உட்பட்ட 11 அருங்காட்சியகங்களை மறு அறிவித்தல் வரும் வரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்ததையடுத்து, நேற்று இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய வனவிலங்கு திணைக்களம், தாவரவியல் பூங்காத் திணைக்களம், வனஉயிரிகள் பாதுகாப்புத் திணைக்களம், வனபாதுகாப்புத்திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு உட்பட்ட தேசிய பூங்கா மற்றும் மிருகக்காட்சி சாலைகள் ஆகியன எதிர்வரும் 2 வார காலம் மூடப்படு மென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ,5)

## நான்கு மாவட்டங்களில் சு.க. தனித்துப் போட்டி!

கொழும்பு, மார்ச் 17

நாடாளுமன்றத் தேர்தலில் நான்கு மாவட்டங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி, நுவரெலியா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் 'கை' சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

(எ-22)



கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கை குறித்து விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி மற்றும் அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று ஆராய்ந்தனர். (ஔ.5)

# கொரோனாவை இனங்காண தென் பகுதியில் இடமில்லையா?

## வவுனியா தெற்கு தவிசாளர் கேள்வி

வவுனியா, மார்ச் 17

**வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் பயணிகளுக்கு கொரேனா வைரஸ்தொற்றியுள்ளதா என்பதை கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அதனைக் கடுமையாக எதிர்ப்பதாக வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் தெரிவித்தார்.**

இந்த விடயம்தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளில் இருந்து வருகை தருவோரைத் தனிமைப்படுத்தி வைப்பதற்கான நிலையம் ஒன்றை வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வேலங்குளம் விமானப்படை முகாமுக்கு அண்மையில் அமைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

நாட்டின் தென்பகுதிகளில் இராணுவ முகாம்கள் மற்றும் பொதுமக்கள் வசிக்காத பல்வேறு பகுதிகள் காணப்படும் நிலையில் எமது பகுதியில் குறித்த மத்திய நிலையத்தை அமைப்பது சந்தேகத்தையும் மக்கள் மத்தியில் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையம் அமைக்கப்படுவதாக எதிர்பார்க்கப்படும் பிரதேசத்துக்கு அண்மையில் அதிக எண்ணிக்கையான மக்கள் வசித்து வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பில்லாத அச்ச நிலையை எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. எனவேகுறித்த மத்திய நிலையத்தை அங்கு அமைப்பதற்கான பணிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் அரசின்மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது - என்றார். (ந-110)

# பற்றிக்கலோ கம்பஸை அபகரிக்க பெருமுயற்சி

மூதூர், மார்ச் 17

'கொரோனா' என்கின்ற போர்வையில் பற்றிக்கலோ கம்பஸை அபகரிக்க முற்படுகிறார்கள். இது கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கும் முயற்சி என்று திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

இரண்டு,மூன்று மாதங்களில் இந்தக் கம்பஸ் இராணுவப் பயிற்சி முகாமாக மாறும். முஸ்லிம்களின் இருப்பைக் கேள்விக்கு உட்படுத்தப்போகிறார்கள். கடந்த நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைபெற முடியாதநிலையில் முஸ்லிம் விவாக சட்டத்தைக் கொண்டு வந்து சிங்கள இன மக்கள் மத்தியில் துவேசங்களை விதைக்கப் பார்த்த அத்துரலிய ரத்ன தேரர் போன்றோர்களிடம் மீண்டும் அதிகாரத்தைக் கொடுத்தால் எமது இருப்பு கேள்விக்குறியாகிவிடும்.

மத அனுஷ்டானங்களை உரிமைகளோடும் அரபி மொழியிலான தொழுகை தடையின்றி நடைபெற வேண்டும். இதனை யாராலும் அடக்க முடியாது. ஆங்கிலேயர்களால் அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் விவாக சட்டத்தை இவர்கள் குழப்ப முற்படுகின்றமை சமூகத்தின் மீதான அடக்கு முறையைக் கொண்டுள்ளது. எமது சமூகத்தின் பாதுகாப்பை நாமே உறுதி செய்யவேண்டும். - என்றார். (த-40)

# தமிழர்களை பலியெடுக்க கங்கணம் கட்டும் அரசு

## சிவமோகன் குற்றச்சாட்டு

வவுனியா,மார்ச் 17

தமிழ் மக்களைப் பலி எடுப்பதில் சிங்கள அரசு குறியாக இருக்கிறது என்று முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்சி.சிவமோகன்குற்றச்சாட்டினார்.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள பம்பைமடு இராணுவ முகாமில் கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குக் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

போரில் லட்சக்கணக்கான உயிர்கள், சொத்துக்களைப் பறிகொடுத்த மக்கள் தங்களுடைய சுய முயற்சியால் மீட்சி பெற்று வருகின்றனர். அதை பொறுத்துக் கொள்ள முடியாத சிங்கள அரசு, தமிழ் மக்களை நோயாளிகளாக்கி மீண்டும் ஒரு இன அழிப்பைச் செய்வதற்கு முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

கொரோனா நோயாளர்களைத் தங்கவைப்பதற்கு அல்லது வெளிநாட்டில் இருந்து வருபவர்களைத் தடுத்து வைத்து பரிசோதனை செய்வதற்கு தென் பகுதியில் இடங்கள் இல்லையா? வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசம் மட்டும் தான் உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா?

ஏப்ரல் குண்டுத் தாக்குதலின் பின்னர், இலங்கையில் அகதிகளாக இருந்த ரோஹிஞ்சியர்களை வடக்கில் தங்க வைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருந்தது. எனவே தமிழர்களை அழித்தொழிக்கும் சிந்தனைகளை அரசு கைவிட வேண்டும். எவ்வளவு வறுமையில் வாழ்ந்தாலும், தமிழ் மக்கள் தூய்மையில் சிறந்தவர்களாகவே காணப்படுகின்றனர். நோய்க் கிருமிகளைக் காவிக் கொண்டு வரும் வெளிநாட்டவரை தமிழர் தாயகப்பகுதிகளில் தங்க வைக்கும் நடவடிக்கையை அரசு உடனடியாக கைவிட வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களின் அனுமதியைப்பெற வேண்டும். என்றார். (கு)

# வவுனியா, மட்டக்களப்பு இலக்காகியமை ஏன்?

## யாழ். மாநகர சபை உறுப்பினர் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 17

'கொரோனா' வைரஸ் தொற்று உள்ளவர்கள் என்று சந்தேகிக்கப்படுவர்களை 224 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வவுனியாவுக்கும், 289 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மட்டக்களப்புக்கும் ஏன் கொண்டு செல்ல வேண்டும்? என்று யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன் கேள்வியெழுப்புகின்றார்.

இதுபற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'கொரோனா' வைரஸ் தொடர்பில் மக்கள் அச்சம் கொண்டுள்ள நிலையில், அரசு அது தொடர்பாக எடுக்கின்ற நடவடிக்கைகள் மக்களை மேலும் அச்சம் கொள்ள வைத்துள்ளது.

இந்த நோய் உள்ளதாகச் சந்தேகிக்கப்படுபவர்களை தனிமைப்படுத்துவதற்கான மையங்கள் மட்டக்களப்பில் ஆரம்பித்து, தற்போது வவுனியா- மன்னார் என்று தொடர்கின்றன.

கொரோனா வைரஸ் தொற்று உள்ள நாடுகளிலிருந்து வருகைதரும் விமானங்களைக் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை விடுத்து அம்பாந்தோட்டையில் உள்ள மத்தள சர்வதேச விமான நிலையத்தில் இறக்கி, அதற்கு அருகிலேயே சன நடமாற்றம் அற்ற பகுதியில் தனிப்படுத்தல் மையங்களை அமைத்து 'கொரோனா' வைரஸ் தொற்று உள்ளவர்களைத் தனிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வவுனியாவில் கொரோனா தொற்று உள்ளவர்கள் என்று சந்தேகப்படுபவர்களை பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக வவுனியாவில் இருந்து 57 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அநுராதபுர போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமல், 139 கிலோமீற்றர் தூரத்திலுள்ள யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு ஏன் கொண்டுவர வேண்டும்?.

எனவே பல துன்பங்களையும், நெருக்கடிகளையும் அவலங்களையும் அனுபவித்து தற்போது சற்று மேலெழுந்துவரும் மக்களின் இயல்புவாழ்வைக் குழப்புகின்ற செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன் - என்றுள்ளது. (கு)



# கொரோனாவைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை

வவுனியா,மார்ச் 17

கொரோனா வைரஸ் இலங்கையில் பரவி வரும் நிலையில் அதனைத் தடுக்கும் முகமாக, வவுனியா பொலிஸார் முன்மாதிரியான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தின் பிரதான நுழைவாயில் அருகே கைகளைச் சுத்தப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்கு உள்ளே வரும் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கைகளைச் சுத்தப்படுத்திய பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர். இந்தச் செயற்பாடானது அனைத்துச் சமூகத்துக்கும் முன்மாதிரியாக விளங்குகின்றது. பொதுமக்கள் அனைவரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். (க-110)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள்

சாவகச்சேரி, மார்ச் 17
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் பெய்த பெருமழையால் பாதிக்கப்பட்ட மேலும் 12 குடும்பங்களுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவுக்குரிய காசோலை அனர்த்தமுகாமைத்துவ அமைச்சால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டு இதுவரை கொடுப்பனவு கிடைக்காத குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் அடுத்த வாரம் அவரவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும்தெரிவிக்கப்பட்டது.

வெள்ளாம்போக்கட்டி. பிரிவில் 6 குடும்பங்களும், இராமாவில்கைதடி மேற்கு, கைதடி தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தலா இரு குடும்பங்கள் வீதமும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடம் பெருமழை காரணமாக பிரதேசத்தைச்சேர்ந்த 156 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட 144 குடும்பங்களுக்கு முற்பணக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்ட நிலையில் மிகுதியுள்ள 12 குடும்பங்களுக்கே தற்போது முற்பணக் கொடுப்பனவுத் தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

கிளிநொச்சியில்

# சிறுபோக நெற்செய்கை கைவிடப்படும் அவலம்

## கையிருப்பில் உரம் இல்லாததால்

கிளிநொச்சி,மார்ச் 17
இரணைமடுக்குளத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு 15 ஆயிரம் ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட போதும், விவசாயிகள் அதனைக் கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரணைமடுக் குளத்தில் தற்போது போதிய நீர் உள்ள நிலையில், 15 ஆயிரம் ஏக்கர் சிறுபோகச் செய்கை மேற்கொள்ள முடியும் என்று விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் விதைப்பை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. 15 ஆயிரம் ஏக்கரில் செய்கை மேற்கொள்வதானால், 30 லட்சம் கிலோ உரம் தேவைப்படும். 30 லட்சம் உரம் 300 சுமை பாரவூர்திகளில் எடுத்து வரப்பட வேண்டும். ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவைத் திணைக்களத்தில் ஓர் ஊர்தி பசளை கூட கையிருப்பில் இல்லை. அதேநேரம் வெளிச் சந்தையிலும் பசளை கிடையாது.

இதன் காரணமாக 2020 ஆம் ஆண்டு சிறுபோகம் தீர்மானித்த திகதியில் ஆரம்பிக்கவே முடியாது. இந்த நிலைமை தொடர்ந்தால் விதைப்பைக் கைவிட வேண்டிய அவலமும் ஏற்படும். எனவே உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே. ஆயகுலனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, மாவட்டத்துக்குத் தேவையான உரவகைகளை எடுத்து வருவதற்கான அனைத்து முயற்சிகளும் இடம்பெறுகின்றன. உரிய காலத்துக்குள் அனைத்து வகையான உரமும் விநியோகிக்கப்படும். என்றார். (க-105)

# போதைப்பொருள் வியாபாரி பொலிஸிடமிருந்து 'ஓட்டம்'

முல்லைத்தீவு, மார்ச் 17
முல்லைத்தீவு மாவட்டத்தில், 'ஐஸ்' போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபர் பொலிஸ் காவலிலிருந்து தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு செம்மலை பகுதியில் கைது செய்யப்பட்டவரே தப்பியோடியுள்ளார். அவர் தனது வீட்டில் போதைப் பொருளை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், கடந்த வியாழக் கிழமை மாலை கைதுசெய்யப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே மறுநாள் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருள் மீன்பிடிப் படகுகள் மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது என்றும் அவர் போதைப்பொருள் வியாபாரி என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-19)



# வரவேற்பு நிகழ்வும் சேவைநலன் பாராட்டும்

வரணி,மார்ச் 17
வரணி கலாசார மத்திய நிலையத்தில் புதிதாக கடமைகளைப் பொறுப்பேற்ற ஜெ.கிரிதரனுக்கான வரவேற்பு நிகழ்வும் ,நிலையத்தில் இருந்து இடமாற்றல் பெற்றுச் சென்ற சி.மகிந்தனுக்கான சேவைநலன் பாராட்டும் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரணி கலாசார மத்திய நிலையத்தில் கலாசார மத்திய அபிவிருத்திச் சங்க செயலாளர் ந.இராசகுமாரன் தலைமையில் நடைபெற்றன.

கலாசார அபிவிருத்தி கிராமிய நிலையத்தின் வளவாளர்கள், ஊழியர்கள், கலாசார உத்தியோகத்தர்களுக்கு மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர். (ஐ-159•122)



# கற்கை உபகரணங்கள் சைக்கிள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 17
அகில இலங்கை 'சைவன்' நற்பணி மன்றமும் அப்பா இராசையா அம்மா சின்னப்பிள்ளை 'இந்து' பொது நூல் நிலையமும் இணைந்து நடத்திய கல்வியில் முன்னேறத் துடிக்கும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், முழுமையான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனும் கலந்து கொண்டார்.

எள்ளங்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் (நாச்சிமார்) ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் மாலை இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளைக் கையளித்தார்.


நிகழ்வில், கலைஞானவாருதி கி.வெள்ளிமலை, ஆலய போசகர் சி.சிவஞானம், ஆலய உபதலைவர் சி.சிவாஜிநாதன், அகில இலங்கை சைவன் நற்பணி மன்ற செயலாளர் சிவத்திரு இ.நாகேந்திரராசா, வட மாகாண தலைமைப்பீட ஓய்வுபெற்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம், ஊடகவியலாளர் ஏ.ரவிவர்மா, ஆசிரியர் செ.பிரதாப், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் பாரியார் யசோதை ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப)

# உதவி வழங்கல்

யாழ்ப்பாணம்,மார்ச் 17
போரில் தனது உறவுகளை இழந்து மனநிலை பாதிக்கப்பட்டு தனிமையில் வாழ்ந்துவரும் பஞ்சாட்சரம் தெய்வேந்திரம் என்பவருக்கு ஆரோக்கியமான உறக்கத்துக்கு உரிய அனைத்து பொருள்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண நகர் சமுர்த்திவங்கி முகாமையாளர் வழங்கிய பரிந்துரைக்கு அமைவாக யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தால் இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது. (ஐ-159)





வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் முதலாவது பங்குனித் திங்கள் உற்சவம் நேற்று நடைபெற்றது. அடியவர்கள் அம்மனுக்குப் புதுப்பானைகளில் பொங்கலிட்டு வழிபட்டனர். பாற்செம்பு மற்றும் கற்பூரச்சட்டி எடுத்தல் அடிஅழித்தல் போன்ற நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றினர். (க-500)

# தேர்தலைப் பிற்போடும் தீர்மானம் ஏதும் இல்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான அச்சுறுத்தல் நிலவுகின்ற போதிலும் கூட பொதுத் தேர்தலை பிற்போடும் எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லையென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பக அதிகாரிகள் இன்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அடுத்த வாரம் வரையில் நிலமைகளை ஆராய்ந்து தேர்தல் தொடர்பான தீர்மானம் ஒன்றுக்கு வரமுடியும். சகல கட்சி பிரதிநிதிகளையும் சந்தித்து இது குறித்து கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுக்கவும் முயற்சிப்போம். என்றார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் தொடர்பாக அரசு மற்றும் சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தி வருகின்ற நிலையில் அரசியல் கட்சிகள் பலவும் தேர்தலை பிற்போட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். (எ)

# 3 நாள்களுக்கு பொதுவிடுமுறை

இன்று செவ்வாய்க்கிழமை முதல் 3 நாள்களைப் பொது விடுமுறையாக அரசு அறிவித்துள்ளது. நேற்று நள்ளிரவு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதாரம், வங்கி, போக்குவரத்து, மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உணவு வழங்கல் உள்ளிட்ட அத்தியாவசியச் சேவைகள் இயங்கும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் துறையினருக்கும் இந்தப் பொதுவிடுமுறை ஏற்புடையது என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடுமுறை நாட்களில் அனைவரும் வீடுகளில் இருக்குமாறும், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும், பொது இடங்களில் கூடவே வேண்டாம் எனவும் அரசு நாட்டு மக்களைக் கோரியுள்ளது. (எ-22)

## கொரோனா...

டவர்களில் 73 வயதுடைய வயோதிபரும், 13 வயது சிறுமியும் அடங்குகின்றனர். வயோதிபர் கராப்பிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேவேளை, தொற்றுக்குள்ளான சிறுமி கொழும்பு, அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவர் நாட்டில் முதலாவதாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சுற்றுலா வழிகாட்டியின் மகள் ஆவார். தொற்றுக்குள்ளானவர்களில் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றிய அதிகாரியாவார் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட ஆயிரத்து 700 க்கும் அதிகமானவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் தற்போது 12 தனிமைப்படுத்தும் மத்திய நிலையங்கள் செயற்படுத்தப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-22)

## வெளிநாட்டிலிருந்து...

வடக்கு மாகாண மக்களைப் பாதுகாப்பதற்காக, அரசின் தேசிய திட்டமிடல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் ஒரு நடைமுறையே இதுவென்றும், மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என்றும்வடக்குஆளுநர்குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பயணிகளிடம் இருந்தே இந்தத் தொற்றுப் பரவுவது அவதானிக்கப்பட்டுள்ளதால் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் தொடர்பாகப் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு நடைமுறைப்படுத்தியுள் ளது.

சுற்றுலா மற்றும் பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளில் இருந்து இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இலங்கைக்கு வந்தவர்கள் தொடர்பான விவரங்களைக் கிராம அலுவலர்கள் ஊடாகப் பெற்றுக் கொள்வதைத் துரிதமாக மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலர்கள் ஊடாக இதை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறும் மாவட்டச் செயலர்களுக்கு வடக்கு ஆளுநர் பணித்துள்ளார்.

தேசிய கொள்கைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறைக்கு அனைத்துத் தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் வடக்கு ஆளுநர் கோரியுள்ளார். (எ-7)

## சிறுமி...

சிறுமியின் தாய் கடந்த சனிக்கிழமை இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். சிறுமியின் தாய் வேலைக்குச் செல்பவர் என்றும், வீட்டினருடன் முன்னரே அறிமுகமான சந்தேகநபர் அந்தச் சந்தர்ப்பங்களில் வீட்டில் வைத்துச் சிறுமியைத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சிறுமியை மருத்துவ அறிக்கைக்காக மருத்துவமனையில் சேர்ப்பித்ததுடன், நேற்றுமுன்தினம் சந்தேகநபரைக் கைது செய்து வவுனியா நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். சந்தேநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-18)

## கொரோனா...

கொரோனா தொற்று இல்லை என்பது பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டதை அடுத்து அவர்கள் நேற்று வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் உள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் ஆகியோரே கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். (எ)

## தேர்தலை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடலின் பின்னர் இந்தக் கோரிக்கையை அறிக்கையூடாக கூட்டமைப்பின் பேச்சாளர் வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் பரவுகின்ற அபாயம் சம்பந்தமாக அரசு தகுந்த உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக எடுக்க வேண்டும். மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். இவ்விடயத்தில் முற்றுமுழுதாக எமது பங்களிப்பை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

மக்களுடைய பாதுகாப்புக்கு அதியுச்ச கரிசனை வழங்கப்பட வேண்டும் என்பதாலும் இந்த அசாதாரண சூழ்நிலையில் ஜனநாயக நடவடிக்கைகளை முழுமையாகச் செயற்படுத்த முடியாத காரணத்தாலும் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலைப் பிற்போடுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ஒ,5,22)

## காணிப்...

என்று தெரிவிக்கப்படுகின்றது.

காணி தொடர்பான வழக்கில் எதிர்வரும் 24 ஆம் திகதி தீர்ப்புக்குக்காக திகதி குறிக்கப்பட்டுள்ள நிலையில் காணியில் குடியிருந்தவர்களுக்கும், வழக்காளிகளுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பிலேயே இவர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பேசாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-60)

## 40 பேருக்கு...

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாகத் தெளிவுபடுத்தும், கொவிட் 10 ஊடக மத்திய நிலையத்தின் நாளாந்த சிறப்புச் செய்தியாளர் சந்திப்பு, நேற்று அரச தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கொரோனா வைரஸ் தொடர்பில் சமூக வலைத் தளங்களில் போலியான செய்திகளைப் பதிவிட்ட 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை வெளிநாடு சென்று திரும்பிய 880 பேர் தொடர்பான தகவல்கள் பொலிஸ் தலைமையகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கம் ஊடாகக் கிடைத்துள்ளன. அவர்களில் 51 பேர் சுற்றுலாப் பயண வழிகாட்டிகளாவர். இந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (எ)

## போலிகளிடம்...

ஆயுர்வேத திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அங்கீகரிக்கப்படாத மருத்துவக் குறிப்புக்களை இணையத்தளத்தினூடாக சிலர் பரப்பி வருகின்றனர். போலி மருத்துவக் குறிப்புக்களுக்கு ஏமாற வேண்டாம் என்று ஆயுர்வேத ஆணையாளர் சத்துர குமாரதுங்க சுட்டிக்காட்டி யுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

தற்போது பரவும் கெவிட்19 எனப்படும் கொரேனா வைரஸுக்கான சிகிச்சை வழங்க ஆயுர்வேத வைத்தியர்கள் என்ற போர்வையில் பலர் சமூக வலைத்தளங்களினூடாக ஆயுர்வேத பொருள்களை அறிமுகப்படுத்துவதை நாம் அவதானித்து வருகின்றோம். இவ்வாறு உத்தியோகப்பற்றற்ற முறையில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களையும் மருந்துப் பொருள்களையும் பயன்படுத்த வேண்டாம் என்று அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். சுகாதார தரப்பால் வழங்கப்படும் உரிய வழிமுறைகளை மாத்திரம் பின்பற்றுமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார். (எ)

## குடும்பத்தை...

துள்ளது. வெளிநாட்டில் இருந்து வந்த குடும்பம் ஒன்று உறவினர் வீட்டில் தங்கியுள்ளது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் நேற்றுக் காலை அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணையின் பின்னர் அந்தக் குடும்பத்தினருக்கு கொரோனா தொற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக வவுனியா மருத்துவமனைக்கு அவர்களைப் பொலிஸார் அழைத்துச்சென்றனர்.

அந்தக் குடும்பத்தின் தாயும் இரு பிள்ளைகளும் கடந்த மாத இறுதியில் வெளிநாட்டில் இருந்து வந்தனர் என்றும், கணவர் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வந்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது. (எ-110,18)

## அனைத்து...

பீ.சனத் பூஜித இதனைத் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் மார்ச் 31 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த அனைத்துப் பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

## லைசென்ஸ்...

பத்திரத்துக்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கல், பரீட்சை, வாகனம் செலுத்தும் செயல்முறைத் தேர்வு உள்ளிட்ட அனைத்து சேவைகளும் இவ்வாறு இடைநிறுத்தப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சநிலை காரணமாக முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

## அ.அட்டை...

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆள்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ,5)

## உடனடி வேலைவாய்ப்பு

**உழவு இயந்திரம் மூலம் மலக்கழிவு அகற்றுவதற்கு சாரதி தேவை.**
செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
(யாழ்.நகரில் வசிப்பவர் விரும்பத்தக்கது)

### கிளீன்வெல் பிறைவேட் லிமிட்டெட்
இல.154, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
077 220 9566, 021 222 4128


(N/12842)(11,17)

### விற்பனைக்கு
நல்ல இன பசு கன்றும் நாம்பன் கன்றும் விற்பனைக்கு உண்டு.
TP:077 773 0567

### கடைகள் வாடகைக்குண்டு
யாழ்.பல்கலைக்கழக சூழலில் கடைகள் உடன் வாடகைக்குண்டு. (உணவகம் தவிர்ந்தது) கிழமை நாட்களில் மாலை 5 மணிக்கு பின் பார்வையிடலாம்.
தொடர்புகட்கு: 076 685 2529


# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதபிள்ளை துரைசிங்கம்
**(ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)**




திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி தெற்கு கட்டுவனை வசிப்பிடமாகவும், நந்தாவில் லேன் கொக்குவில் கிழக்கை தற்காலிக முகவரியாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை துரைசிங்கம் நேற்று (16.03.2020) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலாயுத பிள்ளை அன்னம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா தெய்வானை அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், ஜெயவீரசிங்கம் மற்றும் மகேந்திரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமணி-சிவப்பிரகாசம், செல்வரட்ணம் - நந்தினி (கனடா), குலசிங்கம் - நளினி, விமலாதேவி - கங்காதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு,** **தகவல் : மனைவி**

077 933 7708

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 02 . 1950



உதிர்வு 16 . 03 . 2012

## அமரர் சுப்பிரமணியம் விக்னேஸ்வரன்
திதி : அபரபக்க நவமி

அன்பு ஈந்தீர், அறிவு ஈந்தீர் - எமக்கு
தந்தையாம் அன்பு மழை பொழிந்தீர்
அற்புதமே அருள் மறையின் அகல் விளக்கே - அப்பா
அன்புடனே உற்றவரை அரவணைத்தீர்!

தனிமரமாய் தவிக்கவிட்டு எங்குற்றீர் - ஐயா
தவிதவித்துப் புலம்புகின்றேன் உமை நினைந்து
தன்னலம் கருதாத உங்கள் ஆத்மா சாந்தியடைய - நாங்கள்
தன்னகரில்லா கயிற்றசிட்டிக் கந்தன் தாள் பணிந்து
வணங்குகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**கைதடி வடக்கு, கைதடி.** **குடும்பத்தினர்.**

(J 11702) (10)



பிறப்பு 22 . 03 . 1937

இறப்பு 16 . 03 . 2020

## திருமதி உருத்திராட்சி கதிர்காமநாதன்
**(ஓய்வுபெற்ற ஆசிரியை - எழுதுவினைஞர் யாழ்ப்பாணம் கச்சேரி)**

யாழ். சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா Dallas, Texas, சுழிபுரம் கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திராட்சி கதிர்காமநாதன் நேற்று (16-03-2020) திங்கட்கிழமை சுழிபுரம் கிழக்கில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை நாசகம் தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் இராசம்மா மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரசிங்கம் கதிர்காமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சற்குணமலர் (ஜேர்மனி), கணேசதாசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சற்குணராணி மற்றும் சுகுணாதேவி (கனடா Ottawa & ஐக்கிய அமெரிக்கா Dallas, Texas), முருகதாசன் (ஜேர்மனி), சிவதாசன் (பிரான்ஸ்), குகதாசன் (Ottawa, கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான புனிதவதியார், நரசிங்கம் மற்றும் சிவத்திராதேவி (இலங்கை), காலஞ்சென்றவர்களான சரவணபுஸ்பவம், சந்ததியார், ஆழ்வானாட்சிப்பிள்ளை மற்றும் ராசிந்தா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாமதேவன், மதிவதனி, சிவராஜா, செல்வநிதி, கமலவதனி, சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமியும், துளசி, நவன்நியா, சங்கீத், சந்தோஸ், ரசனியா, கீர்த்தி, கிருஸ்ணா, கௌசியா, தினேஸ், திவ்யா, கதிரோன், ரம்மியா, ராகுலன், ரஜீவன், விஸ்ணுஜன், இலக்கியன், கதிரவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (17-03-2020) செவ்வாய்க்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.30 மணியளவில் திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வீரபத்திரர் கோவிலடி,**
**சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்** **தகவல்:- குடும்பத்தினர்.**

077 560 9629, 0777836287 +491778889888

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில் 30 . 03 . 1945



விண்ணுலகில் 17 . 02 . 2020

அமரர் திருமதி
## கமலாதேவி முத்துலிங்கம்
**(ஓய்வுநிலை பிரதி அதிபர் - கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை)**

எங்கள் அன்னை கடந்த 17.02.2020 அன்று இறைவனடி சேர்ந்த செய்தியை அறிந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்டும் நேரிலும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமும் அஞ்சலி செலுத்தி எமக்குப் பலவித உதவிகள் புரிந்து ஆறுதல் வழங்கியோருக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மேலும் நாளை (18.03.2020) புதன்கிழமை காலை 9 மணியளவில் எங்கள் வீட்டில் நடைபெற உள்ள வீட்டுக்கிருத்தியக் கிரியைகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள், மதியபோசன நிகழ்வுகள் என்பவற்றில் தாங்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கரம் கூப்பி வரவேற்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

**359, இராமநாதபுரம், கிளிநொச்சி.**

அன்புடன்
**குடும்பத்தினர்.**
077 743 9169

## யாழ். விடுதிகளில் நேற்று சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட விருந்தினர் விடுதிகள் மற்றும் நட்சத்திர விடுதிகள் யாவும் நேற்று சோதனையிடப்பட்டன.
யாழ் மாநகர சபையின், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இவை சோதனையிடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் விடுதிகள் மற்றும் நட்சத்திர விடுதிகள் சோதனைக்கு உட்படுத்தப்படுத்தப்படுகின்றன.
வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு அமைய யாழ்ப்பாணத்திலும் இந்த நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வரும், மாநகர சபை சுகாதாரக்குழுவின் தலைவருமான து.ஈசன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விடுதிகளில் தென்கொரியா, ஈரான் மற்றும் இத்தாலி ஆகிய 3 நாடுகளைச் சேர்ந்தவர்கள் யராவது தங்கியுள்ளனரா, விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு கொரோனா தொற்று தொடர்பான அறிகுறி உள்ளதா , போன்றவற்றுடன் தங்கியிருக்கும் ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொடர்பான தகவல்களும் சேகரிக்கப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந)

# ரிஷாத், மேர்வினுக்கு சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு, மார்ச் 17
முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாத் பதியுதீனை எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு கோட்டையில் உள்ள சி.ஐ.டி. தலைமையகமான 4 ஆம் மாடியில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சதொச நிறுவனத்தின் ஆவணங்கள் பலவற்றை மூன்றாம் தரப்பு நபர் ஒருவரின் கைக்கு கிடைக்கச் செய்தமை, மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்யும்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் மற்றும் 7 ஆயிரத்து 340 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதியின்போது இடம்பெற்றன என்று கூறப்படும் மோசடிகள் குறித்தான விசாரணைகளுக்காக ரிஷாத் பதியுதீன் அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்த விசாரணைகளுக்காக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி கோட்டையில் உள்ள சி.ஐ.டி. தலைமையகமான நான்காம் மாடிக்கு முற்பகல் 10 மணிக்கு முன்னிலையாகுமாறு சி.ஐ.டி. மேர்வின் சில்வாவுக்கு இந்த அறிவித்தலை அனுப்பியுள்ளது.

(எ)

# வேட்புமனுத் தாக்கல் இருவருக்கே அனுமதி

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 17
நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் இருப்பதால் வேட்புமனு தாக்கல் செய்ய வரும் கட்சிகளில் அதிகாரமுள்ள இரண்டு பேர் மாத்திரம் வருகை தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் கட்சிகளின் செயலர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் வேட்புமனு தாக்கல்செய்ய வரும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் அது தொடர்பில் அதிகாரமுள்ள ஒருவர் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. வேட்புமனுவை கையளிக்க அதிகாரமுள்ள கட்சிகளின் செயலர், அதிகாரமுள்ள பிரதிநிதி அல்லது சுயேச்சைக் குழுக்களின் தலைவர் மற்றும் வேட்பாளர் பட்டியலில் இரண்டாவதாக பெயர் இடம்பெற்றிருப்பவர் வேட்புமனுத் தாக்கல் செய்ய செயலகத்துக்குள் வரமுடியும்.

தேவை இருப்பின் உதவியாளர் ஒருவரை செயலகத்துக்குள் அழைத்து வரமுடியும். வேட்புமனு தாக்கல் செய்ய அழைத்து வருவதற்கு சட்டரீதியாக எண்ணிக்கை இருக்கின்றபோதும், வேட்புமனு தாக்கல் செய்பவரும் மற்றுமொருவரும் செயலகத்துக்குள் வரமுடியும்.

வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊர்வலம் செல்வது சட்டவிரோத கூட்டங்கள் நடத்துவது தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தடை செய்யப்பட்டிருக்கின்றது என்றாலும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்பு பெறும் நோக்கில், வேட்புமனு தாக்கல்செய்யும்வேளையில், கட்சி ஆதரவாளர்களை அழைத்து வருதல் தேர்தல்கள் செயலகத்துக்கு முன்னால் ஒன்றுகூடுதல் மற்றும் ஊர்வலம் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் இந்த தினங்களில் மாத்திரம் இல்லாமல் முடியுமானால் எதிர்வரும் 10 நாள்களுக்காவது, அரசியல் கூட்டங்கள் நடத்துதல், மக்களை ஒன்றுதிரட்டி பாரிய மக்கள் பாரிய கூட்டங்களை நடத்துவதை தவிர்த்துக்கொள்ளுமாறு அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களை கேட்டுக்கொள்கின்றோம், என்றுள்ளது.

(ஒ,5)


ஆண்டொன்றின் நினைவில்
தோற்றம்
11 . 03 . 1946
மறைவு
29 . 03 . 2019




அமரர் இராசரத்தினம் செல்வம்
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
உமைப்பிரிந்து ஆண்டொன்று ஆனதுவோ!
யாதும் இழந்தது போல்
தனித்து நிற்பதுவாய் உணர்கின்றோம்.
நெஞ்சம் கலங்கித் தவிக்கின்றோம்
நல்லறத்தின் நாயகியே எங்கள் அம்மா!
காலங்கள் பல கடந்தாலும்
என்றும் எங்கள் நினைவில்
நீங்காது நிலைத்திருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
297, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
077 377 9442

காலத்தால் மறவாத நினைவலைகள்
25ஆவது ஆண்டு
10ஆம் ஆண்டு
09ஆம் ஆண்டு
11ஆம் ஆண்டு









ஏரம்பு சோதிலிங்கம்
(தலைவர் - ஜோதி ஒளி ச.ச.நிலையம்
பண்டிதர் நூல் நிலையம்
இலைக்கசபை உறுப்பினர் - மண்டைதீவு)
சோதிலிங்கம்
மங்கையற்கரசி
சோதிலிங்கம்
இலட்சுமிகாந்தன்
[ஆசிரியர் B.A.J.P - அகில இலங்கை]
சோதிலிங்கம்
பஞ்சலிங்கம்
பாசத்தின் உறைவிடமான பெற்றோர்கள்
அன்புக்கு ஓர் அவதாரமான அண்ணன்
அன்பு மழையில் நனைந்த ஆசைத்தம்பி
காலனவன் இவர்களை மறைத்தாலும்
எம் நினைவில் என்றும் மறவோம்.
இல.27/1, கருவேலடி லேன், கொக்குவில்.
குடும்பத்தினர்.

# கட்டுநாயக்கவை மூடும் தீர்மானம் எடுக்கவில்லை

## சிவில் சேவைகள் பணிப்பகம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மூட எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ள சிவில் சேவைகள் பணிப்பகம், பலாலி விமான நிலையத்தை இரண்டு வாரங்களுக்கு மூட தீர்மானம் எடுத்துள்ளது என்றும் அறிவித்துள்ளது.

தற்போது வரையில் 14 சர்வதேச நாடுகளுக்கான பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் நேற்று விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

நோய் எதிர்ப்பு நடவடிக்கையாக தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது. விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகளை பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் பலாலி விமான நிலையத்தையும் இரண்டு வாரத்திற்கு மூட அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

குறிப்பாக பலாலி விமான நிலையத்தில் இருந்து இந்தியாவுக்கான விமான சேவைகள் முன்னெடுக்கப்படுகின்ற காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிவில் சேவைகள் பணிப்பகம் அறிவித்துள்ளது.

(எ)

# ஒன்றுகூடுவதைத் தவிர்த்து தனிநபர் சுகாதாரம் பேணுக

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு மாகாணத்தில் இதுவரை எவருக்கும் கொரோனா தொற்று இனங்காணப்படவில்லை. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பில் மக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு 18 பேர் இலக்காகியுள்ளனர். வடக்கு மாகாணத்தில் இதுவரையில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை. எனினும் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலில் பொது மக்களுக்கான சில அறிவுறுத்தல் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து வெளிநாடுகளுக்கு பயணம் செய்யவுள்ள மக்கள் தமது பயணத்தை தவிர்க்க வேண்டும். வெளிநாடுகளில் இருந்து இங்கு வர விருப்பவர்களும் தமது பயணத்தை பிற்போடவும். வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் தொடர்பில் அந்தந்த பகுதி குடும்ப நல உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

பொது மக்கள் ஒரு இடத்தில் ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும். முக்கியமாக விளையாட்டு போட்டிகள், கலை, கலாசார, சமய நிகழ்வுகள், ஏனைய கலந்துரையாடல்கள், கூட்டங்களையும் பிற்போட மாறும் அல்லது தவிர்க்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அறிவுறுத்தலை மீறி ஏற்பாடு செய்யப்பட்டாலும் பொது மக்கள் கலந்து கொள்ள வேண்டாம். அது தொடர்பில் முறையிடலாம்.

குடும்ப நிகழ்வுகள் அதாவது திருமணம், பிறந்த தினம் போன்ற நிகழ்வுகளை பிற்போட வேண்டும். இல்லாவிட்டால் குடும்பத்துக்கு நெருங்கிய உறவினர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஆள்களுடன் அந்த நிகழ்வுகளை முடித்துக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சில இடங்களில் நேற்றும் பிறந்ததினம் போன்ற நிகழ்வுகள் அதிகமானவர்களை ஒன்றிணைத்து கொண்டாடப்பட்டதை நாங்கள் அவதானித்துள்ளோம். இந்தச் செயற்பாடு தற்காலத்துக்குப் பொருத்தமானதல்ல.

வணக்கத் தலங்களிலும் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும்.

இது தொடர்பில் வணக்கத் தலங்களுக்குப் பொறுப்பானவர்கள் அந்த நிகழ்வுகளை தவிர்க்க முடியாவிட்டாலும், அதில் அதிகளவான மக்களை உள்வாங்காமல் நடத்த வேண்டும். ஒவ்வொருவரும் தனிநபர் சுகாதாரத்தை கட்டாயம் பின்பற்ற வேண்டும் - என்றார்.

# முகக் கவசத்துக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, மார்ச் 17

முகக் கவசங்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை சுகாதார அமைச்சு நிர்ணயித்துள்ளது. சாதாரண முகக் கவசங்களுக்கான விலையானது 50 ரூபாவாகவும், என்95 ரக முகக் கவசங்களின் விலையானது 325 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (எ)

# 200க்கும் மேற்பட்டோர் தொடர் கண்காணிப்பில்

கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் 200க்கும் மேற்பட்டோர் கண்காணிக்கப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 28 பேரும் கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை, பொலனறுவை வைத்தியசாலை மற்றும் கராப்பிட்டிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று அபாயத்தால் இலங்கையின் 11 தேசிய நூதனசாலைகளை மறு அறிவித்தல் வரை மூட அரசு தீர்மானித்துள்ளது. (எ-22)


## மரண அறிவித்தல்கள்

### அருட்பணி பேதுரு அருள்நாதன் அமதிஅடிகளார்



அருட்பணி பேதுரு அருள்நாதன் அமதி அடிகளார் நேற்று 16.03.2020 "அமலஉற்பவம்" எனும் அமலமரித்தியாகிகள் இல்லத்தில் காலமானார்.

அவருடைய உடலம் புனித டிமசனட் சிற்றாலயம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை புதன்கிழமை 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.ஆயரின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: மாகாண முதல்வர், தொடர்பகம்
657/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2721

### குழந்தைவேலு ஆனந்தராசா



வேலனை கிழக்கினை பிறப்பிடமாகவும் இல 953, திருநகர் வடக்கு கிளிநொச்சியினை வதிவிடமாகவும் கொண்ட அனைவராலும் ஐங்கரன்மாமா என செல்லமாக அழைக்கப்படும் குழந்தைவேலு ஆனந்தராசா நேற்று (16.03.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமநாதன் ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் வள்ளியம்மாவின் அன்பு கணவரும் மோகனராசா (லண்டன்), தாட்சாயினி (ஆனந்தி - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி), காலஞ்சென்ற குகராசா, அரவிந்தராசா (லண்டன்), தர்சினி (தங்கம் - ஆசிரியர், வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தயாளினி (லண்டன்), புஸ்பாகரன் (பிரதேச செயலகம், கண்டாவளை), சாஸ் (லண்டன்), யசோதரன் (உரிமையாளர், வானவில் அரிசி ஆலை, நெடுங்கேணி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயா, குபேரன், ஆதவன், அங்குழலி, அருள்நயனி (மாணவர்கள் - கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்) லண்டனைச் சேர்ந்த அனந்திகா, அக்ஷயா, அய்ஷா, அயான் ஆகியோரின் அன்பு பேரனும், தங்கராசா (கனடா), காலஞ்சென்ற செல்வநாயகம், தியாகராசா (கனடா), சிவராசா (கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரனும், சிவபாலச்சந்திரன் (லண்டன்), இராமச்சந்திரன் (வட்டக்கச்சி), யோகேஸ்வரி அம்மா (திருநகர்), தனபாலசுந்தரம் (ஜேர்மன்), பூபாலச்சந்திரன் (லண்டன்), பரமேஸ்வரி (அதிபர் - மலையாளபுரம் அ.த.க. பாடசாலை), வளர்மதி (விவசாயத்திணைக்களம் - கிளிநொச்சி), ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக திருநகர் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 356 0785, 077 927 8736


# மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த ஏற்பாடு

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அரச சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பரவுவதை தவிர்ப்பதற்கு மக்கள் நடமாட்டத்தையும் ஒன்றுகூடலையும் குறைப்பதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நீதிமன்ற, சிறைச்சாலைகள் நடவடிக்கைகள் சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன.

நேற்று ஒன்றுகூடிய நீதிச் சேவைகள் ஆணைக்குழு மார்ச் 17 முதல் 20ஆம் திகதிவரை மேற்கொள்ளப்படவுள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து சுற்றறிக்கை ஒன்றை நீதிபதிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

வர்த்தக உயர் நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு அழைக்கப்படவிருந்த அனைத்து வழக்குகளும் திறந்த நீதிமன்றத்துக்கு அழைப்பு விடுக்கப்படமாட்டாது. அந்தவழக்குகள் தொடர்பாக ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நீதிமன்ற வளாகத்துக்கு வந்து பொதுமக்கள் அறிந்துகொள்ள முடியும். அத்தியாவசிய மற்றும் அவசர முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய வழக்குகள் மட்டும் அந்தந்த நீதிபதிகளின் தற்றுணிபின் பிரகாரம் அழைக்குமாறு சுற்றறிக்கை யின் மூலம் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற மற்றும் நீதிவான் நீதிமன்றங்களுக்கும் இது ஏற்புடையதாகும் என்று நீதிச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை வளாகத்திலும் பொது மக்கள் நடமாட்டம் இதன் கீழ் மட்டுப்படுத்தப்படும். வங்கி கொடுக்கல் வாங்கல்கள், வர்த்தக மற்றும் வாணிப நடவடிக்கைகளை வழமையான ஒழுங்கில் பேணுவதற்கு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் கொரோனா ஒழிப்பு செயலணியின் பணிகள் ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை 1090 என்ற இலக்கத்தில் உள்ள நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்படும்.

நாளாந்த மக்கள் வாழ்க்கை பாதிக்கப்படாத வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் பேணுவதற்கு அரசு முடியுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. உருவாகியுள்ள நிலமையை சரியாக புரிந்துகொண்டு கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பை அரசு எதிர்பார்க்கின்றது என்றுள்ளது. (எ)




மருத்துவர் விஷ்ணு சிவபாதம்
குழந்தை நல மருத்துவ நிபுணர்
மட்டக்களப்பு போதனா மருத்துவமனை

இன்று உலகளாவிய ரீதியில் மிகுந்த பேசு பொருளாக இருப்பது கொரோனா வைரஸ் ஆகும். கொரோனா வைரஸ் சீனாவின் வுகான் பகுதியில் இருந்தே மனிதர்களுக்குத் தொற்றி உள்ளதெனக் கண்டறியப்பட்டது.

அன்றிலிருந்து இன்றுவரை 145க்கும் மேற்பட்ட நாடுகளில் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இலங்கையும் இதற்கு விதிவிலக்கில்லை. காலத்துக்குக் காலம் புதுவிதமான வைரஸ்கள் மனிதர்களுக்கு தொற்றை ஏற்படுத்தி இருந்தாலும் இந்த கொரோனா வைரஸ் பற்றிய அபரிதமான பயம் எம்மத்தியில் காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் இன்றைய காலத்தில் காணப்படுகின்ற உறுதிப்படுத்தப்படாத ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் வதந்திகளால் பொதுமக்கள் குழப்பி விடப்படுகின்றார்கள் என்பதே உண்மை.

**அறிகுறிகள்**

கொரோனா சுவாசத் தொகுதியைப் பாதிக்கும் ஒரு வகை வைரஸ் ஆகும். எனவே இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருமல், சளி, தொண்டை வலி மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்படும். சில நேரங்களில் அது நிமோனியாவையும் ஏற்படுத்தலாம். ஆனால் பொதுவாக எந்த ஒரு சுவாசத் தொகுதியைப் பாதிக்கும் வைரஸ் காய்ச்சலுக்கும் இவை பொதுவான அறிகுறிகளாகும்.


**பரவும் முறைகள்**

கொரோனா மனிதனில் இருந்து மனிதனுக்கு விரைவாகப் பரவுகின்றது. காற்றின் மூலம் பரவுவது உறுதிப்படுத்தப்படாத போதிலும் டொப்லெஸ்ற் எனப்படும் சிறு துணிக்கைகள் மூலமும் சூழலில் தொற்றுக்கு உள்ளாகிய பொருள்களில் இருந்தும் மனிதர்களுக்கு பரவுகின்றது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருடைய சளியானது மற்றவருக்கு படும்பொழுதோ அல்லது அவர் பயன்படுத்திய பொருள்களை மற்றவர் பயன்படுத்தும் பொழுதோ சுகதேகியான மற்றவருக்கு பரவ வாய்ப்புள்ளது. சூழலில் சுயாதீனமாகக் காணப்படும் இந்த வைரஸ் இரண்டு தொடக்கம் மூன்று நாள்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்த வைரஸ் ஆனது ஒருவரிடமிருந்து சராசரியாக 3 தொடக்கம் நான்கு நபர்களுக்கு தொற்றும் ஆற்றலைக் கொண்டது. ஆனாலும் நம் எல்லோராலும் அறியப்பட்ட அம்மாள் நோயானது ஒருவரிடமிருந்து 10 தொடக்கம் 12 நபர்களுக்கு தொற்றக் கூடியது. இந்த வகையில் இது அதிக வீரியம் கொணட வைரஸ் இல்லை.

**தொற்றக்கூடிய தன்மை**

ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியதிலிருந்து 2 தொடக்கம் 14 நாள்களுக்குள் அவருக்கு இந்த நோய்க்கான அறிகுறிகள் தோன்றும். கொரோனா தொற்றுக்கு உட்பட்ட நபர் இருமும்போது அல்லது தும்மும்போது அடுத்தவருக்கு அந்த வைரஸ் இலகுவாகப் பரவிவிடுகின்றது. தொடுகைகள் மூலம் பரவுவதைக் காட்டிலும் இருமல், தும்மல் மூலம் பரவும் வேகம் மிகமிக அதிகம்.

இன்று காணப்படும் சர்வதேச தொடர்புகள் மூலம் இலங்கைக்குள் இந்த வைரஸ் ஊடுருவி இருந்த போதிலும் இலங்கை அரசாலும் சுகாதாரத் துறை யினராலும் மேற்கொள்ளப்படுகின்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் இந்த வைரஸால் எமக்கு ஏற்பட இருக்கின்ற பாதிப்புகள் குறைவடையும் அல்லது கட்டுப்படுத்தப்படும். 12 மருத்துவமனைகள் கொரோனாவை எதிர்கொள்வதற்காக இலங்கையில் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.



ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியதிலிருந்து 2 தொடக்கம் 14 நாள்களுக்குள் அவருக்கு இந்த நோய்க்கான அறிகுறிகள் தோன்றும். கொரோனா தொற்றுக்கு உட்பட்ட நபர் இருமும்போது அல்லது தும்மும்போது அடுத்தவருக்கு அந்த வைரஸ் இலகுவாகப் பரவிவிடுகின்றது. தொடுகைகள் மூலம் பரவுவதைக் காட்டிலும் இருமல், தும்மல் மூலம் பரவும் வேகம் மிகமிக அதிகம்.



**கொரோனா நோயாளி செய்ய வேண்டியவை**

கொரோனா நோயுடன் ஒருவர் அவதானிக்கப்பட்டால் அவர் உடனடியாக முகக் கவசத்தை அணிய வேண்டும். இதன்மூலம் மற்றவர்களுக்கு இந்த வைரஸ் பரவுவதைத் தவிர்க்க முடியும். அத்துடன் அந்த நபர் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை முறையினை ஆரம்பிக்க வேண்டும். அவருடைய குடும்ப உறுப்பினர்களும் முகக் கவசத்தை அணிவதன் மூலம் தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இந்த வைரஸை அழிப்பதற்கு உரிய மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரு நோயாளியின் குணங்குறிகளுக்கு ஏற்றவாறு சிகிச்சை முறைகள் வைத்தியர்களால் வழங்கப்படும்.

**பாதுகாக்கும் முறை**

இது றொப்லெஸ்ற் எனப்படும் துணிக்கைகள் மூலம் பரவும் ஒரு வைரஸ் என்பதால் சுகதேகியான ஒருவர் முகக் கவசங்கள் அணிவதன் மூலம் இதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது. மாறாக சிறந்த சுகாதார முறைமையினை பேணுவதன் மூலம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அதாவது சிறந்த உடற்சுகாதாரத்தைப் பேணுவதன் மூலமும் (கைகளை நன்கு சவர்க்காரம் கொண்டு கழுவுவதன் மூலம்) அல்லது நோய் தொற்று உள்ள ஒருவர் சளி மற்றும் உமிழ் நீரை சுகாதார முறைப்படி அகற்றுவதன் மூலமும் தொற்றிலிருந்து மற்றவர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இந்த நோய் ஏற்பட்ட ஒருவரும் அவருடன் கூடஇருக்கின்ற உறவினர்களும் கண்டிப்பாக முகக் கவசங்களை அணியவேண்டும்.

**அச்சம் வேண்டாம்**

இந்த நோயானது சீனாவில் ஏற்பட்டது போன்ற பெரியளவில் தொற்றுக்களை இலங்கையிலும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. தற்போது சீனாவில் ஒரு குளிர்கால நிலையாகும். இதன் பொழுது இந்த வைரஸின் பரவல் அதிகமாகக் காணப்படும். ஆனால் இலங்கையில் தற்போது காணப்படுகின்ற வெயிலுடன் கூடிய காலநிலையால் இந்த வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. மற்றும்எமது நாட்டின்சுகாதாரத்துறையினர் விழிப்புணர்வுடன் இருக்கின்றமையாலும் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவே பொதுமக்கள் கொரோனா வைரஸைக் கண்டு அளவுக்கதிகமாக ஐயம் கொள்ளத் தேவையில்லை. சுகாதார அமைச்சினாலும் மற்றும் தகுதியான ஊடகங்களாலும் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை பின்பற்று வதன் மூலம் இந் நோயை நாம் அனைவரும் தைரியமாக எதிர்கொள்ளலாம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இதுவே முக்கிய பணி

சீனாவில் ஆரம்பித்து உலகின் பல நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸ் இப்போது இலங்கையிலும் காலூன்றி விட்டது. கொரோனா தொற்றுக்கு இலக்காகியவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. அந்த எண்ணிக்கை நேற்று மாலை 22 ஆக உயர்ந்து விட்டது.

கொரோனா தொற்றுக்கு இலக்காகியவர்கள் அனைவரும் இதுவரை தென்பகுதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். வடக்கில் இதுவரை கொரோனா தொற்று இனங்காணப்படவில்லை என்பது நிம்மதி தருகின்ற போதும், அது தொடர்பாக அலட்சியமாக இருந்துவிடக் கூடாது.

அரசு இயந்திரம் இந்த நிலமையைச் சீர் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன் பொது விடுமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதும், ஒவ்வொரு தனி மனிதரும் இது தொடர்பில் கரிசனை கொள்ள வேண்டும். சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவதன் ஊடாக இந்தத் தொற்றில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

கொரோனா வைரஸ் தொற்று இலங்கையில் இனங்காணப்பட்டது முதல் மக்களிடையே பெரும் அச்ச நிலமை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. சமூக வலைத் தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகும் தகவல்கள் மக்களின் அச்சத்தை அதிகரிக்கின்றன என்றே கூறலாம். சமூக வலைத் தளங்களில் பரவும் தகவல்களின் உண்மைத் தன்மையை மக்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சமூக வலைத் தளங்களில் பதிவிடுவோரும் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் தொடர்பான தேவையற்ற அச்சத்தை மக்களிடையே உருவாக்குவதைத் தவிர்த்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே தற்போது அனைவரின் முன்பாகவும் உள்ள முக்கிய பணியாகும்.

கைகள், முகத்தை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ளல், அதிக சன நெரிசல் உள்ள இடங்களைத் தவிர்த்தல், முகக் கவசம் அணிதல் போன்ற இலகுவான முறைகள் மூலம் கொரோனாத் தொற்றில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும். இந்த வழிமுறைகளைப் பின்பற்றிக் கொண்டிருந்தால் கொரோனா வைரஸ் அணுகாது என்று சுகாதாரத் துறையினர் அறிவுறுத்துகின்றனர். அதை ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் மாதம் பொதுத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் தேர்தல் பரப்புரைகள் சூடு பிடித்துள்ளன. சமூக வலைத் தளங்களிலும் ஏனைய வழிகளிலும் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் அரசியல்வாதிகளும் தேர்தல் பரப்புரைகளை முழுவீச்சில் முன்னெடுக்கின்றனர். ஆனால் தற்போது நாட்டில் உள்ள நிலமையில் இது அவசியமானதா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது. மக்கள் தற்போதுள்ள அச்ச நிலமையில் தேர்தல் பரப்புரைகளில் அவர்கள் கவனம் திரும்பாது என்பதையும் சந்தர்ப்ப சூழ்நிலையைப் புரியாது முன்னெடுக்கப்படும் இந்தப் பரப்புரைகள் அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கள் தேர்தல் பரப்புரைகளைச் சற்றுத் தள்ளி வைத்து விட்டு மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதே தற்போதைய தேவை. அதைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். துணிச்சலுடன் இந்த ஆபத்தை எதிர்கொள்ள மக்களைத் தயார்படுத்த வேண்டும். அந்தப் பொறுப்பு அனைவருக்கும் உண்டு அரசியல்வாதிகளுக்கும் உண்டு.

# பொதுத்தேர்தலை ஒத்திவையுங்கள்!

## மங்கள சமரவீர வேண்டுகோள்



கொழும்பு, மார்ச் 17

பொதுத்தேர்தலை ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரிடம் முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

கொவிட் 19 என்று பெயரிடப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகளுள் ஒன்றாக கைகளை சுத்தமாக கழுவுமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் கைகளை சவக்காரமிட்டு கழுவியவாறு முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர காணொலியொன்றை வெளியிட்டுள்ளார். அந்தக் காணொலி ஊடாகவே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

'கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உலகில் முக்கியமான நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரையரங்குகள் மூடப்பட்டுள்ளன. இசை நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு சில நாடுகள் தேர்தல்களைக்கூட ஒத்திவைத்துள்ளன.

எனினும், இலங்கையில் மக்கள் செத்து மடிந்தாலும் பரவாயில்லை, தாம் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற ஆசையில் குழுவொன்று, தேர்தலை ஒத்திவைக்காமல், அதனை நடத்துமாறு அறிவிப்புகளை விடுத்து வருகின்றன. இது வேதனைக்குரிய விடயமாகும்.


எனவே, நாட்டு மக்களின் நலன்கருதி தேர்தலை பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

நாட்டு மக்களை பாதுகாப்பதற்காக கொரோனாவுக்கு எதிராகப் போராடுவதே முதன்மை இலக்காக இருக்க வேண்டும் என்றார்.

(ஒ.5,44)

*வீடமைப்புக்கான அடுத்த கட்ட*

# நிதி இன்னுமில்லை; பயனாளிகள் கவலை



முல்லைத்தீவு, மார்ச் 17

கடந்த வருடம் வீடுகள் அமைக்கத் தெரிவான குடும்பங்களுக்கு அடுத்தகட்ட நிதி விடுவிக்கப்படாததால் மக்கள் வேலைகளை முழுமைப்படுத்த முடியாதுள்ளனர் என்று கவலை தெரிவிக்கின்றனர்.

பயனாளிகளுக்கு தலா ஏழரை இலட்சம் ரூபா நிதியில் வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான முதற்கட்ட நிதிவிடுவிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், அடுத்த கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படாதமையால் பயனாளிகள் வீடுகளை முழுமைப்படுத்த முடியாதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே அதிகாரிகள் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர் மக்கள்.

(த-500)

# போதைப்பொருள் வைத்திருந்தாரென ஒருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 17

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் 'குடு' போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அங்கு போதைப்பொருள் பாவனை இடம்பெற்று வருகின்றது என்று கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் அங்கு சென்று சந்தேகநபரைக் கைது செய்தோம் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்தனர். (த-19)

# ஹரீனுக்கு தேசியப்பட்டியல்!

கொழும்பு, மார்ச் 17

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என தெரிய வருகின்றது. சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பரப்புரைக் குழு முகாமையாளராகவும், ஊடக விவகாரங்களைக் கையாளும் பொறுப்பும் ஹரீனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றும், தேசியப் பட்டியல் ஊடாக அவருக்கு நாடாளுமன்றம் வருவதற்கான வாய்ப்புவழங்கப்படவுள்ளதுனவும்அறியமுடிகின்றது. 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட ஹரீன் பெர்ணான்டோ அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றார்என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,44)

# சமூக வலைத்தளங்களும் இளம் பெண்களும்

சூரியகுமார் சியாளினி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



இளைஞர்கள் என அறியப்படும் இளமைக் காலத்தில் இளம் பெண்கள் முக்கிய கருப்பொருளாகக் கொள்ளப்படுகின்றனர். பெண் என்பது ஓர் உயிர் எனச் சமூகம் அங்கீகரித்து அவளுக்கு ஆணுக்கு நிகரான உரிமையையும் சுதந்திரத்தையும் கொடுக்கத் தூண்டும் எனலாம். ஆண்களின் வாழ்வில் ஒரு பகுதியாக பெண்களே முக்கிய இடம் வகிக்கின்றனர். சமூகத்தில் முக்கிய புள்ளியாகக் கருதப்படும் இளம் பெண்களில் ஒரு பகுதியினர் கல்வி, விளையாட்டு, கலை ஆர்வம், வீரதீரச் செயல்கள் என சாதித்து வரும் நிலையில் இன்னொரு பக்கம் பாலியல் தொல்லைகள், துஷ்பிரயோகம், ஆணாதிக்கம், சமூக வலைத்தளங்களில் துன்பப்படுதல் என துன்பம் அடைந்து வருகின்றனர்.

சமூக வலைத்தளங்களில் பெரும்பான்மையானவை மனிதர்களின் வாழ்வில் இன்றியமையாததாக இருக்கின்றது. மக்கள் தொகையில் இளைஞர் யுவதிகளை அதிகம் கொண்ட நம் நாட்டில் சமூக வலைத்தளங்களின் வளர்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாக பிரபல்யமடைந்து வருகின்றது எனலாம். சமூக வலைத்தளங்களான பேஸ்புக், வாட்ஸ் அப், வைபர், இன்டர்கிராம், ரிக்டொக் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சமூக வலைத்தளங்களில் இளம் பெண்களின் வாழ்வில் நன்மைகளும், தீமைகளும் நிறைந்த வண்ணம் உள்ளது. இதன் நன்மைகளை நாம் எப்படி நமது வாழ்வுக்கும், தொழிலுக்கும் பயன்படுத்திக் கொள்வது என்கின்ற பார்வை மட்டுமே நம்மை முன்னோக்கி நகர்த்தும். சென்ற தலைமுறையினருக்குக் கிடைக்காத அரிய வாய்ப்பு இன்றைய இளம் பெண்களுக்கு கிடைத்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

கையடக்கத்தொலைபேசி இல்லாதகாலத்தில் நூலகத்துக்குச் சென்றால்தான் பெண் எழுத்தாளர்களையும், அவர்களின் படைப்புக்களையும் இனங்காண முடியும் என்ற நிலை இருந்து வந்தது. இன்று அப்படியா? ஒருபோதும் இல்லை. பலபெண்கள் சமூக வலைத்தளங்களில் கவிதை, கட்டுரை என எழுதுவது மட்டுமல்ல வாய்மொழியாகக் கூட கூறி வருகின்றனர். எழுத வாசிக்க தெரியாத பாமர மக்கள் கூட வீடியோக்கள் மூலம் பார்த்து பயன் பெறக் கூடிய அளவுக்கு சமூக வலைத்தளங்கள் வசதி ஏற்படுத்தித் தந்துள்ளன. மேலும் உலகத்தில் உள்ள இலட்சக்கணக்கான பயனர்கள் பார்த்து பயன்.பெறுகின்றனர். சமூக வலைத்தளங்களை கருவியாகக் கொண்டு பல பெண்களின் திறமைகள் உலகறியச் செய்யப்படுகின்றன.



### பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

இளம் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற குற்றங்கள், பஸ்களில் இடம்பெறும் சில்மிஷங்கள், றோட்டில் தனியாக செல்லும்போது நடைபெறும் சொல்லுக்கடங்கா ரவுடித் தனங்கள் என அனைத்தையும் ஆதாரபூர்வமாக உலகத்திற்கு வீடியோக்கள் மூலம் எடுத்துச் செல்வதில் சமூக ஊடகங்களுக்கு நிகர் எதுவுமில்லை எனலாம். கடந்த ஆண்டு அனைவராலும் அறியப்பட்ட 'மீரூ' விவகாரமானது, சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்ட ஒன்று. பெண்களுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகளைக் கண்டித்து மாபெரும் போராட்டத்திற்கான ஆட்சேர்ப்புக்களையும் ஆதரவுகளையும் சமூக வலைத்தளங்களின் மூலமே பெற்றுக் கொண்டனர் என்பதில் ஐயமில்லை.

இளம் பெண்கள் தங்களின் படைப்புகளை விளம்பரம் செய்வதற்கும் பாரம்பரிய நடனங்கள், இசைக்கருவிகளை கையாளுதல், பாடுதல் என பலதரப்பட்ட திறமைகளை வெளிக்கொணரவும் இத் தளங்கள் ஓர் தொலைத்தொடர்பு காரணியாக இருக்கின்றது. மேலும் தமக்கு வருகின்ற விமர்சனங்களையும், பாராட்டுகளையும் நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இவ்வளவு நன்மைகள் இருப்பினும் அதில் இரண்டு பங்கு எதிர்மறை அனுதாபங்கள் சமூக வலைதளங்களில் தொடர்ச்சியாக இயங்கும் அனைத்து பெண்களுக்கும் கிடைத்திருக்கும். பாலியல் வசை, உடல் ரீதியான விமர்சனங்கள், பகிடிவதைகள், தவறாக சித்தரித்தல் போன்றவை, பெண்கள் வழக்கமாக எதிர் கொண்டவை. இவை முதன்முறையாக தாக்கப்படும்போது பல பெண்கள் கணக்கை மூடி விட்டுச் செல்கின்றனர். ஏனெனில் இளம் பெண்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும். இளம்பெண்கள் சமூகத்தை தனிப்பட்ட சுய கௌரவத்தையும், ஒழுக்கத்தையும் அங்கீகரிக்க வேண்டியுள்ளது.

### தாமாகவே பிரச்சினைகளை தேடிக் கொள்ளும் பெண்கள்

போலிக் கணக்குகளில் உலா வரும் சில நபர்கள், இவ்வாறான இழி செயல்களில் ஈடுபடுகின்றனர். ஒரு பெண் சுதந்திரமாக ஏதாவது ஒரு கருத்தை பதிவேற்றம் செய்தால் எதிர் வாதம் செய்வதற்கு தவறமாட்டார்கள். ஒழுக்க பகிடி, உருவக் கேலி வசைகள் முதலியவற்றிலிருந்து ஆரம்பிப்பார்கள். இன்றைய சில இளம்பெண்கள் தாங்களாகவே பிரச்சினைகளைத் தேடி கொள்கின்றனர். டிக் டோக், டப்ஸ்மாஷ் மூலம் சுய படங்கள் வீடியோக்களை பதிவிடுவதன்னால் பெண்களே குற்றவாளிகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். தாங்கள் பிரபல்யமடைய வேண்டும் என்ற நோக்குடன் இவற்றைச் செய்கின்றனர். காம வெறி பிடித்த கொடூரர்களும் இத் தளங்களில் வலம் வருகின்றார்கள் என்பதனையும் மறந்து, சில இன்பங்களுக்காக மட்டும் தங்களை அளவுக்கதிகமாக அழகுபடுத்திக் காட்டுகிறார்கள். வலைத்தளங்களின் வலைக்குள் சிக்கி விடும் இளம்பெண்கள், ஆன்லைனிலும், ஆஃப்லைனிலும் காலத்தை வீணாக்கி படிப்பில் கோட்டை விட்டு விடு கின்றனர். கவிதைகள், கட்டுரைகள், விஞ்ஞான சார் அணுகுமுறைகள் என பல இலட்சம் நன்னெறி ஊடகங்கள் சமூக வலைத்தளங்களில் கொட்டிக் கிடக்கின்ற போதிலும் அவற்றை சிலர் தட்டிக் கழித்து விடுகின்றனர்.

இதில் யார் சிக்குவார்கள் என வலை விரித்து காத்துக் கொண்டிருக்கும் கொடூரர்களுக்கு பொழுதுபோக்கு என நினைத்து பெண்கள் பதிவேற்றும் 'டிக் டோக்'குக்கும் 'டப்ஸ்மாஷ்'சும் வாய்ப்புகளைத் தூண்டி விடுகின்றன. தங்களது புகைப்படங்களை இட்டு அதில் கிடைக்கின்ற கமெண்டுகளும், லைக்குகளும் தங்களுக்கான அங்கீகாரம் என அவர்கள் நினைக்கிறார்கள். வலைத்தளங்களில் இருக்கும் புகைப் படங்களில் 60 வீதமானவை சம்பந்தப்பட்டவருக்குத் தெரியாமல் பயன்படுத்தப்படுவது தான் என சமீபத்திய புள்ளிவிவரம் ஒன்று சொல்கின்றது?

> **இளம்பெண்களே! ஒரு புகைப்படம் நல்ல தளத்தில் இருப்பதற்கும் தீய தளத்தில் இருப்பதற்கும் உள்ள வேறுபாடுகளை நீங்கள் உணர வேண்டும். எனவே எந்தப் புகைப்படத்தையும் பதிவு ஏற்று முன்னர் ஒரு கேள்வி கேளுங்கள் "இது அவசியம் பதிவேற்ற வேண்டுமா?" அவசியம் என மனதில் படுவதை மட்டும் கேட்டு விடாது, புத்திசாலித்தனமாக சிந்திக்கும் மூளையிடமும் கேட்டு விடுங்கள். மூளை சொன்னால் மட்டும் கேளுங்கள், ஏனெனில் மனம் அலைபாயக் கூடியது.**

இளம்பெண்களே, ஒரு புகைப்படம் நல்ல தளத்தில் இருப்பதற்கும் தீய தளத்தில் இருப்பதற்கும் உள்ள வேறுபாடுகளை நீங்கள் உணர வேண்டும் எனவே எந்த புகைப்படத்தையும் பதிவு ஏற்று முன்கர் ஒரு கேள்வி கேளுங்கள் "இது அவசியம் பதிவேற்ற வேண்டியதொன்றை?" அவசியம் என மனதில் படுவதை மட்டும் கேட்டு விடாது புத்திசாலித்தனமாக சிந்திக்கும் மூளையிடமும் கேட்டு விடுங்கள் மூளை சொன்னால் மட்டும் கேளுங்கள் ஏனெனில் மனம் அலைபாயக் கூடியது.

### கவனமாகக் கையாள்தல் அவசியம்

மொபைலுக்கு நல்ல பாஸ்வேர்ட்டை ஒன்றைப் போடுங்கள் அப்களை அணுக தனித்தனி பாஸ்வேர்டுகளை போடுவது இன்னும் சிறந்தது. வலைத்தளங்களை யாரேனும் தவறாக அனுகினால் அவர்களைப் 'பிளக்' செய்து விடுங்கள். அந்த நபர் என்ன நினைப்பாரோ, காயமடைவாரோ என்று சந்தேகங்கள் தேவையில்லை.

சமூக வலைதளங்களில் நமது தனிப்பட்ட விடயங்களை பகிர்மலும், புகைப்படங்களை பகிராமலும், விரோத சிந்தனைகளை பகிராமலும் இருந்தால் பெரும்பாலான சிக்கல்களில் இருந்து விடுபட்டு விடலாம்.



# கூட்டமைப்புத் தோற்றால் அது தமிழரின் தோல்வியே

## அதற்கு இடங்கொடாதீர் என்று வலியுறுத்துகின்றார் வேட்பாளர் மயூரன்

**வவுனியா,மார்ச் 17**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் படுதோல்வி அடையு மாக இருந்தால் ஒட்டுமொத்த தமிழினத்துக்குமான இழப்பாகவே அது அமையும். எனவே தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்தார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளரு மான செந்தில்நாதன் மயூரன்.

வவுனியா கணேசபுரம் கிராம அபி விருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது பல விமர்சனங்கள் இருக்கின் றன. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது சில விமர்ச னங்கள் இருக்கின்றன. அவர்கள் மீது இருக்கின்ற விமர்சனங்க ளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய கருத்துக்கள்தான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலமிழக் கச்செய்வதாக அமைந்திருக்கின்றன.

வெறுமனமே இளைஞர்கள் அரசி யலுக்கு வர வேண்டும் என்று சொல்லிவிட்டு அவர்களுக்கான வாய்ப்பை நாங்கள் வழங்காவிட் டால் இனிவரும் காலங்களில் இளைஞர்கள் ஒரு தேர்தலை அல் லது. அரசியலைச் சந்திக்கப் பயப் படுவார்கள். அதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடைய கருத் துக்கள், சிலருடைய பேச்சுக்கள்



காரணமாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு இன்று பலமிழந்து சென்று கொண்டிருக்கின்றது.

எனவே நீங்கள் எங்களுக்குக் கை கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பு. நிச்சய மாக உங்களுக்கான சரியான அர சியல் தீர்வை நிச்சயமாக ஏற்படுத் திக் கொடுக்க தயாராக இருக்கின் றோம்.

எங்களுடைய பிரச்சினைகளை இனி இளைஞர்கள் முன்னெடுத்துச் செல்வார்கள் என்று உங்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிற விதத்திலே எங்களுடைய பதவிக் காலங்கள் சரியான முறையில் இருக்கு மென்று உங்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றோம்.

**தமிழரைச் சிதறடிக்கவே பலரும் களமிறக்கம்**

எங்களுடைய வாக்குகளைச் சிதற டிப்பதற்காக பல சுயேச்சைக் குழுவினர் களம் இறக்கப்பட்டிருக்கி றார்கள். அவர்களுடைய நோக்கங் கள் சிங்கள தேசியக் கட்சிகள் ஊடாக வன்னி மாவட்டத்தில் பல நாடாளு மன்ற உறுப்பினர்களை உருவாக்க வேண்டும் என்ற கெட்ட சிந்த னையே. மக்களுடைய பிரச்சினை களுக்குக் குரல் கொடுப்பதற்காக அவர்கள் களமிறக்கப்படவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**கூட்டமைப்பை தோற்கடித்து சர்வதேசத்துக்கு காட்ட அரசு முயற்சி**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் படுதோல்வி அடை யுமாக இருந்தால், அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான இழப் பல்ல. ஒட்டுமொத்த தமிழினத்துக் கான இழப்பு என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பலம் இழந்தால் தமிழர்கள் மீண்டும் பலமிழந்து விட்டார்கள் என்று சர்வதேசம் வரைக்கும் பேசு கின்ற பேசுபொருளாக நாங்கள் மாறிவிடக்கூடாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக விருப்பு வாக்குகளினூடாக வெற்றிபெறச் செய்யவேண்டும். -என்றார். (த-110)



## தமிழரையும் இணைத்து பயணிப்பதே நோக்கம்

*கூறுகின்றார் வாசுதேவ*

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடக்கு- தெற்கு என்ற பாகுபாடு இன்றி தமிழ் மக்களை யும் இணைத்துப் பயணிப்பதே எமது நோக்கம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியைச் சேர்ந்தவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கட்சியின் மாவட்ட அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் போட்டியிடும்போது வடக்கு, தெற்கு என்ற பாகுபாடு எமக்குக் கிடையாது. ஆகவே இவ்வாறான விடயங்களில் தமிழ் மக்கள் அச்சம் அடையத்தேவை யில்லை. நாம் அனைவரையும் சேர்த்துக் கொண்டு பயணிப்பதையே விரும்புகின்றோம். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை இணைத்து இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

ஓர் அரசு ஒரு நாடு என்ற முறையே இங்கு உள்ளது. ஆகவே அனைத்து மக்களுக்கும் எல்லா உரிமை களும் உள்ளன. - என்றார். (த-7.111)

## விக்கி கூட்டணியில் குணசீலன் போட்டி

மன்னார், மார்ச் 17

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் மருத்துவர் ஞானசீலன் குணசீலன் 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி யின்' வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியின் மன்னார் மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

இதை அவரே தெரிவித்துள்ளார்.

குணசீலன் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட் சியின் சார்பில் கடந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-56)

## முன்னாள் போராளிகள் கருணாவுடன் இணைவு

வவுனியா,மார்ச் 17

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியை ஆதரித்து, அவர்களோடு இணைந்து தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிபெற்று நாடாளுமன்றுக்குச் செல்லத் தீர்மா னித்துள்ளோம் என்று ஒருங்கிணைந்த போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் அறிவழகன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் நடத்தப் பட்ட ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் தேர்தலில் எங்களுடைய வேட்பாளர்களை யும் அரவணைத்துச் செல்லுமாறு தமிழ் தேசியக் கூட் டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகி யவற்றை அணுகியிருந்தோம். அவர்கள் எங்களை அரவணைத்து அரசியல் செய்ய விரும்பாத நிலை யைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதனால் விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி களை அரவணைத்து, அரசியல் செய்யக்கூடிய ஒரு தலைமையில் நாங்கள் அணிதிரள வேண்டிய ஒரு சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

அந்த வகையில் ஒருங்கிணைந்த முன்னாள் போரா ளிகளாகிய நாங்கள் விநாயகமூர்த்தி முரளிதரனுடைய தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியை ஆதரித்து அவர்களோடு பயணித்து, தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றுக்குச் செல்வதாக தீர்மானித்திருக் கிறோம். - என்றார். (த-110)

## டெனீஸ்வரனும் போட்டியிடுகின்றார்

வவுனியா, மார்ச் 17

வடக்கு மாகாண முன்னாள் அமைச் சர் பா.டெனீஸ்வரன், விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையுடன் இணைந்து போட்டியிடவுள்ளார் என்று அந்தக் கட்சியின் தலைவர் இ.மலர வன் தெரிவித்துள்ளார். இந்தக் கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் சுயேச் சைக் குழுவாகப் போட்டியிடவுள்ளது.

வேட்பாளர் தெரிவின்போது முன் னாள் போராளிகளையும் உள்வாங்கு மாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு டெனீஸ்வரன் அண் மையில் கடிதம் ஒன்றை அனுப்பியி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-110)

## அரசுக்கு ஆதரவளித்த ஒரே கட்சி கூட்டமைப்பே!


### ஆனந்தசங்கரி குறிப்பிடுகின்றார்

யாழ்ப்பாணம், மார்ச் 17

அரசுக்கு ஆதரவு கொடுத்த ஒரே யொரு எதிர்க்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தமிழர் விடுத லைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரி வித்துள்ளார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட ப்பட்டுள்ளதா வது: வடக்கு, கிழக்கு தமிழ் மக்க ளுக்கு மாற்றுத் தலைமை அவசி யம் கிடையாது என்று காரைதீவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ் அரசுக்கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் குறிப் பிட்டுள்ளார். போர் முடிந்த கடந்த 10 வருடங்களில் தமிழ் அரசுக் கட்சித் தலைமை தமிழ் மக்க ளுக்கு எதனைப் பெற்றுத்தந்துள் ளது?. அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப் பிரதேச செயல கத்தை தரமுயர்த்தக்கூட இந்த தலைமையால் முடியவில்லை.

பிரதான எதிர்க் கட்சியாக அமர்ந்து கொண்டு அரசுக்கு ஆதரவாக குரல் கொடுத்ததைத் தவிர வேறெ துவும் செய்யவில்லை. - என்றுள் ளது. (த-6)



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தில் பூக்கள் அழகுற நிறைந்து ஓங்கி வளர்ந்து காட்சி தரும் மரத்தைப் பலரும் ஆர்வத்துடன் இரசித்து வருகின்றமையால் அவதானிக்க முடிந்துள்ளது. (க-39)

## அங்கத்துவக் கட்சியாக கூட்டமைப்பு ஏற்கவில்லை

அகத்தேசிய முற்போக்குக் கழகத்தை அங்கத்துவக் கட்சியாக இணைத்துக்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்தபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளது என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், அகத்தேசிய முற்போக்கு கழகத்தின் தலைவருமான எம்.பி.நடராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா பண்டாரிக்குளத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அகதேசிய முற்போக்குக் கழகம் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

வடக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் உரிமை, சுதந்திரம் என்பனவற்றோடு தமிழ் மக்களின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு சுயேச்சையாகப் போட்டியிட்டு ஆசனங்களைப் பெற்று அமையப்போகும் அரசுடன் பேரம்பேசலினூடாக அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்று மக்களுக்குக் கையளிப்பதே எமது முக்கிய நோக்கம்.

2013ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தபோதும் அரசியல் ரீதியான அங்கீகாரம் எனக்கு வழங்கப்படவில்லை.

இந்தநிலையில் அகதேசிய முற்போக்குக் கழகம் அடிமட்ட மக்களின் அபிவிருத்தியை மையமாகக்கொண்டு அவர்களுடைய தேவைகள் பிரச்சினைகளை இனங்கண்டு உரிய இடங்களுக்குக் கொண்டுசென்று அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்டது - என்றார். (து-18)



## ஒன்றுகூடல் நிகழ்வு

ஊர்காவற்றுறை பங்கு இளையோருக்கும், புனித சவேரியார் குருமட நான்காம் வருட இறையியல் மாணவர்களுக்குமான ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறை பங்கில் நடைபெற்றது.

மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 15 அருட்சகோதரர்களும், 45 ற்கும் அதிகமான இளையோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு, கருத்துரை என்பன இடம்பெற்றன. வளவாளர்களாக திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த கரன்சன் ஜெகன் கலந்துகொண்டார். (ஐ-222)

### தேர்தல் குறித்து

# ஆணைக்குழுவின் நிலைப்பாடு என்ன?

### அநுரகுமார கேள்வி

கொழும்பு, மார்ச் 17

பொதுத் தேர்தலை பிற்போடுவதா அல்லது திட்டமிட்ட அடிப்படையில் நடத்துவதா என்பது தொடர்பில் தனது அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை தேர்தல் ஆணைக்குழு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.



பொதுத் தேர்தலில் 22 மாவட்டங்களிலும் களமிறங்கவுள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் வேட்புமனுவில் கையொப்பமிடும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அநுரகுமார.

பொதுத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் அனைத்து பகுதிகளிலும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. வேட்புமனுத் தாக்கலின் பின்னர் சகல நடவடிக்கைகளும் ஆரம்பமாகவிருந்தன.

அத்துடன், முன்கூட்டியே மாவட்ட மற்றும் தொகுதிவாரியாக மக்கள் சந்திப்புகளையும் எமது இயக்கம் நடத்திவந்தது.

எனினும், நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. எனவே, மக்களின் பாதுகாப்புகருதி அனைத்துபரப்புரைக்கூட்டங்களையும், மக்கள் கூடும் நிகழ்வுகளையும் இடைநிறுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. வெள்ளமாக இருந்தால் இரண்டு நாள்களில் இயல்பு நிலை ஏற்பட்டுவிடும் என்று நம்பலாம். சூறாவளியாக இருந்தால் அபாயம் எப்போது நீங்கும் என்பதை ஊகிக்கலாம். ஆனால், இந்த வைரஸ் எப்போது முடிவுக்கு வரும் என்பதைச் சொல்லமுடியாது. மறுபுறத்தில் மக்களைச் சந்திக்காமல், பரப்புரைகளை முன்னெடுக்காமல் எவ்வாறு கொள்கைகளை மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்வது? பணபலம் படைத்தவர்களுக்கே ஊடகங்கள் வாயிலாக பரப்புரை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும்.

எனவே, நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை தேர்தல் ஆணைக்குழு உடனடியாக அறிவிக்க வேண்டும். வேட்புமனுத் தாக்கலின் பின்னர் தேர்தல் காலத்தை நீடிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கே இருக்கின்றது. - என்றார். (ஒ.5,44)

### 'கொரோனா'வை ஒழிக்க வேண்டி

# திருக்கேதீச்சரத்தில் 21இல் மகா யாகம்

மன்னார், மார்ச் 17



'கொரோனா' வைரஸ் தாக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மன்னார் திருக்கேதீச்சரத்தில் மகா யாகம் நடைபெறவுள்ளது என்று திருக்கேதீச்சர திருப்பணிச் சபைச் செயலாளர் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உலக மக்களை அச்சுறுத்தி வேகமாகப் பரவி வரும் கொரோனா' வைரஸ் தாக்கத்தை முடிவுறுத்தி உலக மக்கள் நலம் பெற பிரார்த்திக்கும் வண்ணம் உலக நாயகனாக வைத்தியநாதனாக கௌரி அம்பிகையுடன் வீற்றிருக்கின்ற மன்னார் திருக்கேதீச்சரநாதர் திருக்கோவிலில் சனிப்பிரதோச நாளான எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம்12 மணி வரை மகா யாகம் நடைபெறவுள்ளது. அதற்குத் திருவருள் கூடியுள்ளது. அடியவர்கள் யாவரும் இந்த மகா யாகத்தை மனதில் இருத்தி உலக மக்கள் நலம்பெறவேண்டி தங்கள் இல்லங்களில் இருந்தே இறைவனைப் பிரார்த்தனை செய்யுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம். - என்றுள்ளது.

**பாம்பு காரணம்**

'கொரோனா' வைரஸ் பரவுவதற்கு பாம்பும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது

அந்த பாம்பை கழுத்தில் அணிகலனாக அணிந்திருப்பவர் சிவபெருமான். அத்துடன் சைவ சிந்தாந்த அடிப்படையில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த பொழுது பாம்பால் உருவான விஷத்தை உண்டு உலக மக்களைக் காத்த திருநீலகண்டராகவும் சிவபெருமானே திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-213)

## வீட்டில் தீ விபத்து

மன்னார், மார்ச் 17

வீடு தீப் பற்றி எரிந்ததில் வீட்டுப்பாவனைப் பொருள்கள் தீயில் கருகிநாசமாகியுள்ளன. இதன்போது எவருக்கும் காயங்களோ உயிர் சேதங்களோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து மன்னார் சௌத்பார் சாந்திபுரம் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

வீட்டின் உரிமையாளர்கள் அருகில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தவேளை இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-213)

## விபத்துக்கள், தாக்குதலில் ஐவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 17

வீதி விபத்து மற்றும் தாக்குதல் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் தனங்களப்பு, சாவகச்சேரி மற்றும் மட்டுவில் ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன.

தனன்களப்பில் மோட்டார் சைக்கிள் பயிற்சியில் ஈடுபட்ட 16 வயதுச் சிறுவன் சில்லு சறுக்கி வீழ்ந்து காயமடைந்தான்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் வீதியின், குறுக்கேவந்த மோட்டார் சைக்கிளுடன் அதே மார்க்கத்தில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவர் காயமடைந்தனர்.

மட்டுவில் தெற்கில் வீதியில் நடந்துசென்ற 64 வயதுடைய முதியவர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தார்.

சம்பவங்களில் காயங்களுக்கு உள்ளான ஐவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9)

# தேர்தலை பிற்போட்டுவிட்டு காபந்து அரசைத் தொடர்க!

## அரசிடம் சஜித் அணி கோரிக்கை



கொழும்பு, மார்ச் 17

**'கொரோனா' வைரஸ் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதால் பொதுத் தேர்தலை ஒத்திவைத்து, காபந்து அரசைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஹிருணிக்கா பிரேமசந்திர இவ்வாறு தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா' வைரஸ் தொற்று அச்சுறுத்தலுக்கு நாடு என்ற அடிப்படையில் முகம்கொடுப்பதற்கு அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற அழைப்பை அரசு இன்னும் விடுக்கவில்லை. மாறாக மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் பற்றியே அது பேசி வருகின்றது.

எதிரணியாகிய நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. நாட்டு மக்களின் வாழ்க்கை தொடர்பிலேயே அஞ்சுகின்றோம். தேர்தல் காலங்களில் எப்படியும் கூட்டங்களை நடத்த வேண்டிவரும். ஆதரவாளர்களும் வருகை தருவார்கள். எனவே, மக்கள்மீது இந்த அரசுக்கு அக்கறை இருந்தால் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும். 'கொரோனா' வைரஸால் பிரிட்டன் ஒரு வருடத்துக்கு தேர்தலைப் பிற்போட்டுள்ளது. அப்படியானால் இலங்கையில் ஏன் அவ்வாறு செய்ய முடியாது?

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? தற்போது அமைச்சரவை செயற்படுகின்றது. அமைச்சர்களுக்கான அதிகாரங்கள் அப்படியே உள்ளன. எனவே, மூன்று, நான்கு மாதங்களுக்கு காபந்து அரசை நடத்தினால் சிறப்பு. அரசு மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. அது மேலும் வலுவடையக்கூடாது என்பதாலேயே விரைவில் தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

**எத்தனை பேருக்கு கொரோனா?**

முப்படையினர் அல்லாமல், வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளன என்பதை கேட்க விரும்புகின்றேன். வைரஸ் தொற்று ஏற்பட்ட பின்னர், சிகிச்சையளித்து குணப்படுத்தும் மருத்துவ நடவடிக்கையை எந்தவொரு நாடும் மேற்கொள்ளும். அது சாதாரண நடவடிக்கையாகும்.

எனினும், வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு, ஒழிப்பதற்கு அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் எவை? இந்த கேள்விக்குக் கட்டாயம் பதில் வேண்டும். ஆனால், அரசிடம் பதில் இல்லை. காரணம், அவர்கள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. சீனாவிலிருந்து பரவிய வைரஸே இதுவெனக் கூறப்படுகின்றது.

எனினும், சீனாவில் இருந்து இன்றளவிலும் ஆயிரக்கணக்கானோர் வருகைதந்து கொண்டுதான் இருக்கின்றனர். அவர்கள் தடுத்து நிறுத்தப்படவில்லை.

எதற்காக சீனர்களுக்கு இவ்வளவு சலுகை? சீனாவிடமிருந்து அதிக கடன் வாங்கி அந்நாடு கூறும் விடயங்களுக்கெல்லாம் தலையாட்டுவதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்துவருபவர்களைத்தடுக்க வேண்டுமெனில் விமான நிலையத்தை மூடவேண்டும் - என்றார். (ஒ,5,44)



## ஏழாலையில் கூட்டமைப்பு மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பரப்புரைப் பணிகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் கிராமிய மட்டங்களிலான மக்கள் சந்திப்புகளை மேற்கொண்டு பரப்புரைப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோரின் மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் ஏழாலை, மயிலங்காடு பிரதேசத்தில் இடம்பெற்றது.

வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை உறுப்பினர் க.அபராசுதன் தலைமையில் இடம்பெற்ற இந்த மக்கள் சந்திப்பில் வேட்பாளர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வெளியிட்டமையுடன், மக்களுடனும் கலந்துரையாடினர். (ம)

## வீட்டுக்கு வாக்களிக்க மக்கள் தயார் நிலை!

### வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியம் ஒட்டு மொத்தமாக வெற்றிவாகை சூடவேண்டும் எனும் நோக்கில் முழு உற்சாகமாக வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க ஆயத்தமாகி விட்டனர் என்பதனை இன்று நேரில் காணக்கூடியதாக உள்ளது இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன்.

யாழ்ப்பாணம், நவாலியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைதியான சூழலில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்று இன்று மாறுபட்ட சூழலில் படையினரின் ஆட்சி சகல இடங்களிலும் இடம்பெறத் தொடங்கிவிட்டதை மக்கள் உணரத்தொடங்கி விட்டனர்.

இந்த நிலை தொடர அனுமதிக்கக்கூடாது. நாட்டில் எப்போதும் மக்கள் நிம்மதியான சூழலில் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய சகல வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி உற்சாகமான சூழலில் வாழவே விரும்புகின்ற னர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டமைப்புவேட்பாளர்களுக்கு வாக்குகளைத் துணிந்து வழங்கி தமிழ்த்தேசியத்தின் மெய்யான உணர்வு பூர்வமான வெற்றிக்கு வழியமைத்து தமிழன் தலை நிமிர்ந்து நிற்கும் வகையில் உற்சாகமூட்டுங்கள் - என்றார். (ரு- 50)

## மட்டு.ஆயருடன் விக்னேஸ்வரன் சந்திப்பு

மட்டக்களப்பு, மார்ச் 17

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், முன்னாள் வடமாகாணசபை முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையைச் சந்தித்தார்.

மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், தேர்தல் விடயங்கள் தொடர்பிலும் மாவட்ட நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

தமது கட்சியின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் ஆயருக்குத் தெளிவுபடுத்தியதுடன் தற்போதைக்கு தமது கட்சியால் நியமிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள் தொடர்பிலும் கலந்துரையாடலின்போது விவரிக்கப்பட்டது. (ரு-150)



## விக்கி கூட்டணியில் தேர்தலில் போட்டி

### அனந்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

நாடாளுமன்றத் தேர்தலின்போது, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் போட்டியிடவுள்ளேன் என்று திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும். பெண்களுக்கு அரசியலில் ஒரு அங்கீகாரம் கிடைக்க வேண்டும். எமது கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியாக உள்ளது. மாற்று அணியா இல்லையா என்பதை மக்கள் தான் தெரிவுசெய்ய வேண்டும்.

ஏனைய கட்சிகளை விமர்சிப்பதை விட்டுவிட்டுநாம் இந்தக்கூட்டணியில் எவ்வாறு மக்களுக்காகப் பயணிக்கவுள்ளோம் என்பதையே சிந்திக்கின்றோம். மக்கள் சரியானவர்களைத் தெரிவு செய்வார்கள். முன்னர் நான் இருந்த கட்சியில் பெண்களுக்கு அரசியலில் சமத்துவம் என்ற நிலைப்பாடு காணப்படவில்லை. இது தவிர, கிழக்கு மாகாணத்திலும் பெண் வேட்பாளரை நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். - என்றார். (ரு-7)

# கொரோனா பாதித்தோரை மன்னாருக்கு அனுப்பாதீர்!

## மன்னார் நகர சபைத் தலைவர் கோரிக்கை



மன்னார், மார்ச் 17

**நாடு முழுவதும் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ள 'கொரோனா' வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் என்று கருதி மன்னாரில் தனிமைப்படுத்துவதற்காக அழைத்து வரும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று மன்னார் நகர சபைத் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள 'காமன்ஸ்' கட்டடத் தொகுதியில் குறித்த நபர்களைக் கொண்டுவந்து தனிமைப்படுத்தி வைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை நாட்டுக்குள் வருபவர்களில் 'கொரோனா' வைரஸின் தாக்கம் இருக்கும் என்று சந்தேகிக்கப்படும் நபர்களை மன்னாருக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது மன்னார் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. பாதிப்புக்கு உள்ளானவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை மேற்கொள்ள ஒத்துழைப்பை வழங்கமுடியும்.

ஆனால் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களை, ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை மன்னாருக்கு அழைத்துவந்து தனிமைப்படுத்த அனுமதிக்க முடியாது.

அவர்கள் இங்கு அழைக்கப்படுவதை அனுமதிக்க மாட்டோம் - என்றார். (த-56)



# கொரோனா முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

கொரோனா வைரஸ் தொற்று இலங்கையையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியுள்ளது. அதனைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மக்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் இடத்திலுள்ள பொலிஸார், முகக் கவசங்களை அணிந்தவாறு பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஒ.5)

## கொரோனா தொற்று

# கர்ப்பிணிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் பரவிவரும் கொரோனா தொற்றைக் கருத்திற் கொண்டு, நாட்டிலுள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கான மாதாந்தப் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு வரையறை விதிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. 8 மாதங்கள் பூர்த்தியான கர்ப்பிணித் தாய்மார்கள் மாத்திரம் பரிசோதனைகளுக்காக வருகை தருமாறும், ஏனையோர் தேவை ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் வருகை தருமாறும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களில், குறிப்பாக 8 மாதங்கள் பூர்த்தியாகாத கர்ப்பிணி தாய்மார்களின் வீடுகளுக்குச் சென்று சுகாதார அதிகாரிகள் பரிசோதனைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு குழந்தைகளுக்கு ஏற்றப்படும் ஊசியை ஏற்றாதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அத்தோடு ஏனையோர் தேவையேற்படும் பட்சத்தில் மாத்திரம் வெளியே செல்லுமாறும், வீணாக வெளியே சுற்றித்திரிவதைத் தடுக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# வீடுகளுக்குள்ளே இருங்கள்!

## கோத்தாபய அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 17



பொது மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, கட்டாய தேவைக்கு ஒருவர் மட்டும் வெளியில் சென்று வருமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுதொடர்பில் தனது கீச்சக பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று (நேற்று) விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தயவுசெய்து வீட்டிலேயே இருங்கள், பொது போக்குவரத்தைப் பயன்படுத்தவோ, பொது இடங்களில் கூடவோ வேண்டாம். கட்டாய தேவைக்கு ஒருவர் மட்டும் வெளியே சென்று, வீட்டுக்குள் நுழைவதற்கு முன் கைகளைச் சுத்தமாக கழுவுங்கள். உங்களையும் ஏனையோரையும் பாதுகாக்கவும் - என்றுள்ளது. (ஒ.5)

# வகுப்புக்கள் பிற்போடல்

இணுவில், மார்ச் 17

இணுவிலில் இயங்கி வரும் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த, சைவத்திருமுறை வகுப்புக்களும், இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையின் திருமந்திர வகுப்பும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றிலிருந்து ஒவ்வொருவரும் தற்காப்புத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதற்காக வகுப்புக்கள் பிற்போடப்பட்டுள்ளன என்று பயிற்சிநெறிகளின் பொறுப்பாசிரியர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அறிவித்துள்ளார். (க)

# அன்பைக் கொடு விண்ணைத் தொடு

மனிதத் தன்மை இயற்கையிலேயே சாந்தமான குண இயல்பைக் கொண்டது. கொடிய குணம் வாய்ந்ததல்ல. புலி, சிங்கம் போன்ற விலங்குகள் ஏனைய விலங்குகளை அடித்துக் கொன்று உண்ணும் சீற்றம் கொண்டவை. ஆகவே அவற்றின் இயல்புக்கு ஏற்ப அவற்றின் பற்கள் நகங்கள் உடல்வாகு போன்றவை பயங்கரமாகத் தோன்றும். ஆனால் மான், முயல் போன்ற விலங்குகள் தாவரஉண்ணியாகமிருதுவான பற்கள் நகங்களுடன் சாந்தமாக வாழுகின்றன.




மனிதர்களும் இயல்பிலேயே மென்குணம் வாய்ந்தவர்கள் தான். ஏனெனில் கடவுளது இயல்பை மனிதன் அடிப்படையாகக் கொண்டுள்ளான். அதனால் நாம் இறைவன் வாழும் கோவில்களாக இருக்கின்றோம். எனினும் நாம் கடவுளின் சாயல் என்பதை மறந்து செயற்பாடுகளை மாற்றிக்கொள்கின்றோம். கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்னும் குரோதப் போக்குகளை வளர்த்துக்கொள்கிறோம்.

ஆனால் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்கள் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள் என்கிறார் ஆண்டவர் இயேசு. பிறர் மீதுள்ள வெறுப்புணர்வு, பழியுணர்வு என்பவற்றை அகற்றிவிட்டு ஒருகல் தூரம் உதவிவரக் கேட்டால் இருகல் தொலைவு வழித்துணை வழங்கும் மனப்பக்குவத்தை வளர்த்திடுவோம். பழியும் பகையும் வாழ்வைப் பாழாக்கும். அன்பும் சமாதானமும் அனைத்தையும் வழமாக்கும்.

எஸ்.யேசுதாஸ்

# கொரோனாவால் நிகழ்வு நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் உள்ள கிறிஸ்தவ சபையில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த கூட்டம் 'கொரோனா' அச்சம் காரணமாக இடைநிறுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

'கொரோனா' அச்சம் காரணமாக கூட்டங்கள் கூட்டுவதைத் தவிர்க்குமாறு அரசு கூறிவரும் நிலையில், விளம்பரப்படுத்தப்பட்டு அந்தக் கூட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டது.

இதை அவதானித்த மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி, மக்கள் ஒன்று கூடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டால் தற்போதைய சூழலில் கொரோனா தொற்று ஏற்படக்கூடும் என சுட்டிக்காட்டி நிகழ்வை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல் விடுத்தார். அதையடுத்து நிகழ்வு இடைநிறுத்தப்பட்டது. (த-105)

# பத்திரிசிய தினம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவிருந்த புனித பத்திரிசியார் தினம் பிற்போடப்பட்டுள்ளது.


கொரோனா அச்சம் காரணமாக வழிபாடுகள், திருப்பலிகளை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயரின் ஆலோசனைக்கு அமைய இந்த விழா பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கொரோனா அச்சம்

# பாரம்பரிய மூலிகைகளை கொள்வனவு செய்ய ஆர்வம்

கொழும்பு, மார்ச் 17

**கொரோனா வைரஸ் அச்சத்திலிருந்து தங்களுக்கு முற்பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்காக பாரம்பரிய ஆயுள்வேத மூலிகைகளையும் மருந்துகளையும் தேடிப் பெற்றுக் கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் என ஆயுள் வேத மூலிகை மருந்து விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.**



இதனால் பெருங்காயம், மஞ்சள், கருஞ்சீரகம், கருஞ்சீரக எண்ணெய் உள்ளிட்ட இத்தியாதி ஆயுள்வேத மூலிகைகள் அதிகளவில் விற்பனையாகி வருகின்றன எனவும் சில இடங்களில் இப்படிப்பட்ட மூலிகைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரசாயனம் கலக்காத வகையில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி தானிய உணவு வகைகளைப் பெற்று நுகர்வதிலும் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இரசாயனங்கள் கலக்காது இயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி தானிய உற்பத்திப் பொருள்களுக்கு மவுசு ஏற்பட்டுள்ளதாக நுகர்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ.5)

## நாணயத்தாள்கள் ஊடாக கொரோனா பரவ வாய்ப்பில்லை

### அமைச்சர் பந்துல

கொழும்பு, மார்ச் 17



இலங்கையில் நாணயத் தாள்கள் மூலம் வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்பில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் நாணயத்தாள்கள் மூலமும் வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், எமது நாட்டில் அவ்வாறு இடம்பெற வாய்ப்பில்லை. சில வெளிநாடுகளில் நாணயத் தாள்கள் மிக மோசமான அழுக்காக உபயோகப்படுத்தப்படுகின்றமையால் அத்தகைய நாடுகளில் அவ்வாறு ஏற்படலாமே தவிர எமது நாட்டில் அவ்வாறு நாணயத்தாள்கள் மூலம் வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்பில்லையென்று குறிப்பிட்டார். (ஒ.5)



## கொரோனா நீங்க சிறப்பு வழிபாடு

வவுனியா, மார்ச் 17

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து மக்களைக் காப்பற்ற வேண்டி, வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகள் நேற்றுக் காலை நடைபெற்றன.

வவுனியா வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், சிவஸ்ரீ சஞ்சீவி காந்தன் குருக்கள் தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன.


கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளான மக்களின் நலன் வேண்டி பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலயத்துக்கு வருகை தந்த அனைத்து அடியார்களும், உலக மக்களுக்காக நெய் விளக்கேற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வழிபாட்டில் வவுனியா நகரசபை உறுப்பினர், சர்வதேச இந்து இளைஞர் பேரவையினர், வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (க-18)

### பலாலியூடாக

## உள்ளூர் சேவை தொடர்கின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 17



பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இரு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ள போதிலும், உள்ளூர் விமான சேவைகள் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வழமைபோன்று நேற்றுக் காலை 7.30 மணிக்கு விமானம் இரத்மலானையிலிருந்து பயணிகளுடன் புறப்பட்டு யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு வந்து மீண்டும் காலை 9.20 மணிக்கு பயணிகளுடன் யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது. எனினும் சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவை இரு வாரங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## திருமண நிகழ்வில் பங்கேற்போரை மட்டுப்படுத்துக!

கொழும்பு, மார்ச் 17

திருமண நிகழ்வுகளை தடை செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும், திருமண நிகழ்வுகளை நடத்தும்போது, சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, முழுமையான சுகாதாரத்துடன் திருமண நிகழ்வுகளை மேற்கொள்ளுமாறும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

திருமண நிகழ்வுகளுக்கு குறைந்தளவிலானோரே பங்கேற்குமாறும் அவர் குறிப்பி ட்டுள்ளார்.

மைதானங்களில் இரவு நேரங்களில் நடத்தப்படும் நிகழ்வுகளுக்காக அனுமதி வழங்க கூடாதென அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அஜித் ரோஹன கூறியுள்ளார். (ஒ.5)

## பரீட்சைகள் பிற்போடல்

வடமராட்சி, மார்ச் 17

மத்திய கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, நாட்டிலுள்ள பாடசாலைகள் மூடப்படுவதன் காரணமாக, தொண்டைமாறு வெளிக்கள நிலைய க.பொ.த. உயர்தர தவணைப் பரீட்சைகள் யாவும் கால வரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளன.

புதிய பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (க)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மார்ச் 17

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படுகின்ற 2020 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சைகள் ஏப்ரல் 10, 11, 12 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகி இருந்தன. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும் என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்று வந்த சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள் மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டா என்றும் அவர் அறிவித்துள்ளார். (ஐ)

## விடுமுறையை கற்றலுக்கு பயன்படுத்த வேண்டும்

### விஜயகலா கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

மாணவர்கள் வீட்டில் இருந்தவாறு சுயமாக கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். விடுமுறைக் காலத்தைக் கற்றலுக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்ததன் காரணமாக இலங்கையின் சகல பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் என்பன மூடப்பட்டுள்ளன எனவே மாணவர்கள் வீடுகளில் இருந்து தங்களுடைய பாடப்புத்தகங்களை வைத்து சுய கல்வியை மேம்படுத்த வேண்டும்.

போர் நடந்த காலத்தில் வடக்கு மாகாணம் கல்வியில் முன்னிலையில் இருந்தது. எனினும் போர் நிறைவடைந்த பின்னர் நாம் கல்வியில் பின்தங்கி உள்ளோம். குப்பிவிளக்கில் கல்வி கற்றவர்கள் தான் இன்று பல உயர் பதவிகளில் உள்ளனர். எனவே பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றல் செயற்பாடுகளை போன்று, சுயகல்வியை மேம்படுத்துங்கள் என்றும் அவர் மாணவர்களைக் கேட்டுள்ளார். (க-111)

## மாநாடு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 17

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இரண்டாவது பேராளர் மாநாடும் நடப்பு வருடத்தின் இறுதி தலைமைத்துவ சபை மற்றும் கட்டாய உயர் பீட கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த மாநாடு, கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் சார்பாக அரசாங்கம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு அமைவாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் செயலாளர் நாயகம் மு.த.ஹஸன் அலி அறிவித்துள்ளார். (க)

# கொரோனா வைரஸ் அவதானம் தேவை

## வலியுறுத்துகிறது இ.த.ஆ.ச.

யாழ்ப்பாணம், மார்ச் 17

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் சரா புவனேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலக நாடுகள் அனைத்தையும் பயங்கரமாக அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸால் உயிரிழப்பும் அதிகமாகி வருகின்றது. தற்போது இலங்கையில் பாடசாலை, கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களும் அவதானிக்கப்படுகின்றன. அது மட்டுமின்றி மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் எடுத்து வரும் நிலை யில், கொரோனா வைரஸ் ஒருவரைத் தாக்கினால் அவரது உடலில் அது எவ்வளவு நாள்கள் இருக்கும்? என்ற புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

கொரோனா பாதித்தால் அவரிடம் குறைந்தபட்சம் 37 நாள்கள் அது வீரியத்துடன் இருக்கும் என்று சீன மருத்துவர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர். 20 நாள்களுக்கு பிறகுதான் அதன் அறிகுறி தெரியும். அதன் பிறகு 20 நாள்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று சீன மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் அந்த காய்ச்சலில் இருந்து மீண்டு வர சில மாதங்கள் ஆகும் என கூறப்படுகிறது. அதேபோல அதை குணப்படுத்திய பிறகும் சில நாள்களுக்கு அதன் பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும். கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் 2 வாரங்களுக்கு கண்டிப்பாக தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பது உலகம் முழுவதும் உள்ள மருத்துவர்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

குழந்தைகள் சிறுவர்கள் வயதுமுதிந்தவர்களை மிகுந்த அவதானத்துடன் கண்காணிக்க வேண்டும். கழிப்பறைகளில் தொற்றுநீக்கிகள் உபயோகிக்கவேண்டும். பழுதடைந்த உணவுகளை உண்ணவேகூடாது. குளிர்ந்த உணவுகள், பானங்களைத் தவிர்ப்பது நல்லது. முதல்நாள் அணிந்த உடையை மறுநாள் அணிவதைத் தவிர்க்கவேண்டும்.

பலர் நடமாடும் இடங்களில் பாவனையில் உள்ள பொருள்களை பயன்படுத்தும்போது மிகுந்த அவதானம் தேவை. பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும்போது நெரிசல்களில் இருந்து உடனடியாக விலகிக்கொள்ள வேண்டும். வெளியில் இருந்து வீட்டிற்குள் நுழையுமுன் வெளிப்படையான உறுப்புக்களைச் சுத்தம் செய்வது அவசியம், என்று குறிப்பிட்டுள்ளார். (ஓ,5)

# சிறையிலிருந்து பிள்ளையான் வேட்பு மனுவில் கையெழுத்து

மட்டக்களப்பு,மார்ச் 17

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்புச் சிறைச்சாலையில் வைத்து வேட்புமனுவில் நேற்றுக் கையொப்பமிட்டார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் போட்டியிடுவதற்காக, கட்சியின் செயலாளரால் கையொப்பம் பெறப்பட்டது. சந்திரகாந்தனின் பெற்றோர், கட்சியின் பிரமுகர்கள் எனப் பலரும் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர். (க-150)


### கொரோனாவிலிருந்து பாதுகாப்பாக இருக்க

# வீட்டுக்கு வந்தவுடனேயே கைகளைக் கழுவுங்கள்!

## மாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 17

**நீங்கள் எங்கு சென்றாலும் வீட்டுக்குத் திரும்பும்போது வீட்டுக்குள் செல்லமுன்னர் வாசலில் கைகளை முறைப்படி கழுவுங்கள். முகத்தையும் கழுவவேண்டும். கைகளை முறைப்படி கழுவுவதற்கு சாதாரண சவர்க்காரமும் தண்ணீரும் போதுமானது. வேலைத்தளங்களிலும் பொது இடங்களிலும் கைகளை முறைப்படி கழுவுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.**



இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாருக்காவது 'கொரோனா' தொற்றின் அறிகுறிகளான காய்ச்சல், களைப்பு, வரட்டு இருமல் போன்றவை (சிலருக்கு உடல்நோ, மூக்கடைப்பு, தொண்டை நோ போன்றவையும் ஏற்படலாம்) ஏற்பட்டால் உடனடியாக முகத்துக்குகவசம்அணிவதுடன் அரச மருத்துவமனையை அணுகவும். இவ்வகை நோயாளிகள் ஏனைய பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். குறிப்பாக வேலைத் தளங்களுக்குச் செல்லவேண்டாம்.

சகலரும் தமது தனிநபர் சுகாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். தமது வீட்டுக்கு வெளியில் செல்கின்றவர்கள் அடிக்கடி (குறைந்தது 2 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை) தமது கைகளை முறைப்படி கழுவ வேண்டும்.

**தவிர்க்கவும்**

'கொரோனா' தொற்றுக் காரணமாக இலங்கையில் ஏற்கனவே கூட்டம் கூடுதல் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பலர் கூடக் கூடிய நிகழ்வுகள் எதையும் தவிர்த்துக்கொள்வது அல்லது பிற்போடுவது அவசியமானது. மீறி நடக்கும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து விலகியிருக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.உதாரணமாகஅணி விளையாட்டுக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை, கலாசார நிகழ்வுகள், வழிபாட்டு இடங்கள், அத்தியாவசியமற்ற கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் அனைத்தையும் பிற்போட வேண்டும். திரையரங்குகள், கலை நிகழ்வுகளும், ரத்துச் செய்யப்பட வேண்டியவையே.

இவற்றை மீறி இந்த நிகழ்வுகள் இடம்பெற்றால் பொதுமக்கள் உடனே பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அல்லது கிராம அலுவலருக்கு அறிவிக்கவும்.

**நிகழ்வுகளைத் தவிர்க்கவும்**

குடும்ப நிகழ்வுகளான திருமண நிகழ்வுகள் போன்றவற்றை பிற்போடுவது நல்லது அல்லது குறைந்தளவு ஆள்களுடன் இவற்றை நடத்துங்கள். சகல வணக்கத்தலங்களிலும் பத்தர்கள் கூடுவதை தவிர்த்துக் கொள்வதுடன் திருவிழாக்கள், வழிபாடுகளை எளிமையாக நடத்த பொறுப்பானவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

பொதுப்போக்குவரத்து வாகனங்களில் பயணம்செய்வதை இயன்றவரை தவிர்த்துக்கொள்ள வேண்டும். மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளர்களை (ஏனைய நோய்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களைக் கூட) பார்வையிடச் செல்வதை கட்டாயமாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நோயாளிகளுக்கு உணவு கொடுப்பதாயின் ஒருவர் மட்டும் குறுகிய நேரத்தில் சென்றுவர வேண்டும். உள்ளக நோயாளிகள் உள்ள சகல அரச மருத்துவமனைகளிலும் தரமான உணவு விநியோகம் நடைபெறுவது கவனத்துக்குரியது.

**சுகாதார ஊழியர்கள்**

அரசு விடுமுறை அறிவித்தாலும், சுகாதாரத் துறையினருக்கு விஷேட விடுமுறை நாள்கள் கடமை நாள்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுள்ள எவரும் அடையாளங் காணப்படவில்லை.

நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட பட்டியலின்படி பின்வரும் 14 நாடுகளிலிருந்து வருபவர்கள் கட்டாயமாக தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்பட வேண்டும். ஈரான், இத்தாலி, தென்கொரியா, ஆஸ்திரியா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, சுவீடன், ஸ்பெயின், சுவிற்சர்லாந்து, ஐக்கிய ராஜ்ஜியம், பெல்ஜியம், நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து கடந்த 09 ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டினுள் நுழைந்தவர்கள் அனைவரும் (அந்த நாட்டவர்கள், எமது புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் இங்கிருந்து அந்த நாடுகளுக்கு சென்றுவந்தவர்கள்) தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்படவேண்டும்.

ஏனைய நாடுகளிலிருந்து வருபவர்கள் தமது வதிவிடங்களில் இரண்டு கிழமைகளுக்கு தம்மைத் தாமே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தவேண்டும். மேலும் இவ்வாறானவர்கள் தங்கியுள்ள அல்லது வசிக்கும் வீட்டிலுள்ள அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்பட்டு இருக்கவேண்டும். புலம்பெயர்ந்துள்ள உங்கள் உறவினர்கள் அண்மைக்காலத்தில் இங்கு வருகைதரத் திட்டமிட்டிருப்பின் அவர்களை தற்போதைக்கு வரவேண்டாம் என்று அறிவுறுத்தவும். அதேபோல் இங்குள்ளவர்கள் வெளிநாடுகளுக்குசெல்லதிட்டமிட்டிருந்தால் இயலுமானவரை உங்கள் பயணத்தைப் பிற்போடவும். உங்கள் வீட்டில் அல்லது அயலில் யாராவது வெளிநாட்டிலிருந்து வந்திருந்தால் உடனடியாக பொதுசுகாதார பரிசோதகர், குடும்பநல அலுவலர் அல்லது கிராம அலுவலருக்கு அறிவிக்கவும். (து)

# 'கொரோனா'விலிருந்து விடுபட சிகிச்சையோடு வழிபாடும் அவசியம்

## யாழ்.பல்கலை துறைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

"தற்போதுள்ள 'கொரோனா' வைரஸ் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு மருத்துவ முறைகளோடு இறை வழிபாடும் மிக அவசிம்" என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து கற்கைகள் பீடத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவர் கலாநிதி பிரம்மஸ்ரீ பாலகைலாசநாதசர்மா தெரிவித்தார்.


யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா'வை கட்டுப்படுத்த எமது முறைப்படி ஆன்மிக ரீதியாக என்ன செய்யலாம் என்று சிந்திக்க வேண்டும். முதலில் இறையருள் மற்றும் நம்பிக்கை வேண்டும். வேதம், கந்த சஸ்டி கவசம் போன்ற பதிகங்களில் இதற்கான தீர்வுகள் முன்னரே கூறப்பட்டு விட்டன.

கோவிலுக்குள் செல்ல முன்னர் கை, கால் கழுவி செல்லும் வழமை உள்ளது. இதேபோன்றசெயற்பாட்டையே'கொரோனா' தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு செய்யுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்துகின்றனர்.

அர்ச்சனையின்போது வேப்பிலை பயன்படுத்தல், தீர்த்தத்தில் மிளகு சேர்த்தல், தூபங்கள் ஏற்றுதல் போன்ற முறைகள் தொற்று நீக்கும் முறைகளாக உள்ளன. இறைவனை நாம் சாந்தப்படுத்த வேண்டும். இதிலிருந்து விடுபடுவதற்கு ஆன்மிக இறை சிந்தனை எமக்கு உருவாக வேண்டும் - என்றார். (து-7)

# யாழ். பஸ் நிலையத்தில் கைகழுவ வசதி தேவை



யாழ்ப்பாணம்,மார்ச் 17


**யாழ். மத்திய பஸ் நிலையத்தில் பொது மக்கள் கைகளைக் கழுவுவதற்குரிய வசதிகளை ஏற்படுத்துமாறு யாழ். நீரிழிவுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.**

சீனாவில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தற்போது சீனாவுக்கு வெளியில் மிகத் தீவிரமாகப் பரவி வருகின்றது. இலங்கையிலும் கொரோனா வேரூன்றியுள்ளது. தொடுகை மூலமாக கொரோனா பரவும் என்பதால் பொதுமக்கள் அடிக்கடி கைகளைக் கழுவவேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் கேட்டுக்கொண்டுள்ளது. இலங்கை சுகாதார ஸ்தாபனமும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. இந்த நிலையில் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு வருகைதரும் பிரயாணிகள் தமது கைகளைக் கழுவுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ். நீரிழிவுக் கழகம் கேட்டுள்ளது. (க)

# சமுர்த்தி வங்கிகளில் ‘கொரோனா’ தடுப்பு பொறிமுறை என்ன?

## கேட்கின்றனர் அலுவலர்கள்

ஏழாலை, மார்ச் 17



சமுர்த்தி வங்கிகளில் கணினிப் பதிவேடு இன்மையால், மாதாந்தம் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவு பெறுகின்றமை மற்றும் வழங்கலில் சுகாதாரமற்ற நிலைமை காணப்படுகின்றது. எனவே ‘கொரோனா’ வைரஸ் தடுப்பு முறைகளைப் பின்பற்றுவதற்குரிய பொறிமுறை தேவைப்படுகின்றது என்று சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் வலியுறுத்துகின்றனர்.

நாட்டிலுள்ள 1073 சமுர்த்தி வங்கிகளிலும் மாதாந்தம் 10ஆம் திகதிக்குப் பின்னர் சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு சமுர்த்தி வங்கிகளிலும் நாளொன்றுக்கு சுமார் 200 க்கும் மேற்பட்ட பயனாளிகள் வந்து செல்கின்றனர்.

‘கொரோனா’ வைரஸ் அச்சம் காரணமாக சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும் சிரமங்களை எதிர்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, சமுர்த்தி வங்கிகளின் பணிகள் யாவும் மனித வலுக் கொண்டே நிறைவேற்றப்படுகின்றன. .பயனாளிகளின் தனிநபர் சுகாதாரம் பேணப்பட்டாலும் சமுர்த்தி வங்கிக் கணக்குப் புத்தகங்கள் யாவும் கைகளால் தொடுகை மூலமே கையாளப்படுகின்றன. சமுர்த்தி வங்கிகளைக் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறன. இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த நீண்ட நாள்கள் தேவைப்படும். வறிய குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கான இந்தக் கொடுப்பனவுகளை மாதாந்தம் வழங்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. எனவே ‘கொரோனா’ வைரஸ் தாக்கம் தொடர்பில் பொறிமுறை ஒன்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உருவாக்கவேண்டும் - என்று கோரிக்கை விடுக்கின்றனர். (து-39)

# கொரோனா நீங்க பிரார்த்திப்போம்!

## இந்து குருமார் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 17

இறைவழிபாட்டின் மூலம் கொரோனா தாக்கத்திலிருந்து நம்மவரைப் பாதுகாப்போம். பன்னாடுகளிலும் வாழும் அனைத்து மக்களுக்காகவும் சைவசமயத்தவர்களாகிய நாங்கள் ஒருமித்துப் பிரார்த்திப்போம் என்று சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயத்தைப் போக்கி அனைத்து மக்களும் நலமாக இருக்க ஆலயங்கள், இல்லங்கள் தோறும் வழிபாடுகள் செய்வோம். குறிப்பாக சைவ சமயம் கூறும் கலாசாரத்தை ஒவ்வொருவரும் பேணுவோம்.

அருகில் உள்ள ஆலயம் சென்று அமைதியாகப் பிரார்த்திப்போம். ஆலயங்கள் தோறும் சிவாச்சாரியார்கள் மூலம் அக்கினி வழிபாடுகள், ஹோமங்கள், யாகங்கள் செய்வதன் மூலம் ஹோமப் பூஜை, மந்திர ஒலி அலை எம்மவரைக் காக்கும்.

சோதிட ரீதியாகவும் கிரக வழிபாடுகளும் அவசியமாகின்றன. இம்மாத இறுதியில் மார்ச் 22இல் செவ்வாயும், மார்ச் 27 இல் குருவும் தனுவில் இருந்து மகரத்துக்கு மாறுவது அனைத்து மக்களுக்கும் மனக் கஷ்டங்கள் படிநிலையில் நீங்கும். கால ஓட்டத்தில் புதுவருடம் எல்லோருக்கும் நன்மை தருவதாக அமையப் பிரார்த்திப்போம். ஆசார சீலர்களாக வாழ்வோம். கடை, சந்தை போன்ற இடங்களுக்குச் சென்று வந்தால் நீராடி தூய்மையானவர்களாக வீட்டில் இருப்போம். மரணவீடு சென்று வந்தாலும், தூய்மையைப் பேணுவோம். நோய்க்கிருமிகளால் எமக்கு தாக்கம் ஏற்படும் இடங்களைத் தவிர்ப்போம். காலையிலும் மாலையிலும் பிராணாயாமம் பயிற்சி யோகாசனம் என்பன சுக வாழ்வுக்கு வழிவகுக்கும் - என்றுள்ளது. (க)




# கொரோனா வியாபாரம்

பாங்கொக், மார்ச் 17

உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கின்றது கொரோனா. ஆனால் கொரோனாவை வைத்தும் வியாபாரம் நடத்துகின்றனர் சிலர். தாய்லாந்திலுள்ள வெதுப்பகம் ஒன்றில், ‘கொரோனா குக்கீஸ்’ விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

# கொரோனா நீங்க இந்து ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள்

கொழும்பு,மார்ச் 17

கொரோனோ வைரஸ் தாக்கத்திலிருந்து அனைத்து உயிர்களையும் காக்க இறை ஆசி வேண்டி, அனைத்து இந்துசமய ஆலயங்களிலும் நாளை புதன்கிழமை விசேட பூசை வழிபாடுகளை நிகழ்த்துமாறு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பௌத்த சாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கையில் அமைந்துள்ள அனைத்துச் சமய வழிபாட்டுத் தலங்களிலும், நாளை புதன்கிழமை மாலை 7 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளை நிகழ்த்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க)

# தமிழரின் இருப்பை கேள்விக்குட்படுத்த அரசு கடும் முயற்சி

## கஜேந்திரகுமார் தெரிவிக்கின்றார்

முல்லைத்தீவு, மார்ச் 17

தற்போதைய அரசு தமிழினத்தை முற்றுமுழுதாக புறக்கணித்து, அவர்களின் இருப்பை எந்தெந்த வகையில் கேள்விக்குட்படுத்தலாம் என்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்று இருக்கக்கூடிய மிக மோசமான ஆபத்து இது.

இவ்வாறு தெரிவிக்கிறார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

முள்ளியவளை வற்றாப்பளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘கொரோனோ’ வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களை கண்காணிப்பதற்கான நிலையங்களை மட்டக்களப்பிலும் வவுனியாவிலும் வைத்திருக்கின்றார்கள். இந்தச் செயற்பாடு இந்த அரசின் தமிழ்த் தேசத்துக்கு எதிரான மனோநிலையை, சிங்கள இனவாதத்தில் மூழ்கிபோய் இருக்கின்றமையை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது - என்றார். (கு-19)

# கொரோனா வைரஸ் விழிப்புணர்வு நடவடிக்கை

ஏழாலை,மார்ச் 17

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் கொரோனா வைரஸ் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கமைவாக கொரோனா வைரஸ் வரும் முன் காப்பது தொடர்பாக ஒலிபெருக்கி வாயிலாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

உடுவில் 5 சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள 30 கிராம அலுவலர் பிரிவுகளில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் இவ் வேலைத்திட்டத்துக்கு வலி. தெற்கு பிரதேச சபையினர் தமது வாகன வசதிகளை வழங்கி ஒத்துழைப்பு வழங்கினர். (ஐ-39)



## முச்சக்கர வண்டியில் பயணிப்போருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் முச்சக்கர வண்டிகளில் ஒரே நேரத்தில் இரண்டு பயணிகள் மாத்திரமே பயணிக்க கூடிய வகையில் மட்டுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுயதொழிலாளர்களின் தேசிய முச்சக்கர வண்டிச் சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. முச்சக்கர வண்டி சாரதிகளின் பாதுகாப்புத் தொடர்பில் அரசு இன்னமும் உரிய அவதானத்தைச் செலுத்தவில்லை என இந்தச் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன தெரிவித்துள்ளார். இதனால் சாரதிகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பைக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி, மார்ச் 17

பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய தென்மராட்சிக் கிளையின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு கடந்த சனிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர். செ.சுப்பிரமணியம், உப தலைவர் மு.பால சுப்பிரமணியம், செயலாளர் ப.கோணேஸ்வரநாதன், உதவிச் செயலாளர் இ.கிருஷ்ணபிள்ளை, பொருளாளர் சு.விஜயநாதன், நிர்வாக சபை உறுப்பினர்களாக பெ.ஜெயபாலசிங்கம் மற்றும் த.தம்பிராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-9)

## காற்றுப் பம்பி இன்மையால் பொதுமக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

மீள்நிரப்பு நிலையங்களில் காற்று நிரப்பும் இயந்திரங்கள் இயங்காமையால் மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் பல எரிபொருள் மீள் நிரப்பு நிலையங்களில், காற்று நிரப்பும் இயந்திரங்கள் நீண்ட நாள்களாக இயங்குவதில்லை.


எரிபொருள் மீள் நிரப்பு நிலையங்களில் காற்று நிரப்பும் செயற்பாடுகள் இலவசமாக இடம்பெறவேண்டும் என்பது சுற்றுநிரூபம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாண நகரத்தில் இயங்கும் பல எரிபொருள் மீள்நிரப்பு நிலையங்களில் அதற்கான வசதிகள் இல்லாமல் இருப்பதாக பொதுமக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. சில மீள் நிரப்பு நிலையங்களில் காற்று நிரப்பும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் மிக நீண்ட காலமாக அவை இயங்காமல் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன எனவும் அங்கு கடமை புரியும் ஊழியர்களிடம் இது பற்றி விசாரிக்கின்றபோது பொருத்தமான பதில்கள் அளிக்கப்படுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட சில மீள்நிரப்பு நிலைய உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தாம் இந்த விடயம் தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய அலுவலகத்துக்கு அறிவித்துள்ளதாத் தெரிவித்தனர்.

'எம்மிடம் போதுமான உபகரணங்கள் இல்லை. இது தொடர்பாக கொழும்பில் உள்ள தலைமை அலவலகத்துக்கு அறிவித்துள்ளோம். இந்த மாத இறுதியில் இந்த விடயம் பூரணப்படுத்தப்படும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது' என வடபிராந்திய மேற்பார்வையாளர் எஸ்.சுரேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். (ந)

### யாழ்.மாவட்டத்தில்

# வெங்காயச் செய்கையில் 'தாள்கொதி' புழு தாக்கம்

### கொக்குகள் கூடுவதை வைத்து இனங்காணலாம் விவசாயப் பிரதிப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்



யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது வெங்காயச் செய்கையில் 'தாள்கொதி' புழு தாக்கம் இனம் காணப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள வெங்காய செய்கை மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு அவர் நேற்றுக் களப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதன்போதே ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக நீண்ட காலத்துக்குப் பின்னர் 'தாள்கொதி' புழுவின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது.

1980, 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இதன் தாக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல்முறையாக இனங்காணப்பட்டது. நீண்ட காலத்தின் பின்னர் தற்பொழுதும் இந்தப் புழுவின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது. இதன் தாக்கம் ஆரம்ப காலத்தில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு 20ஆவது நாளில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தற்பொழுது நடைபெறுகின்ற இந்த வெங்காயச் செய்கையில் 40, 45 நாள்களுக்குப் பின்னர் 'தாள் கொதி' புழுவின் தாக்கத்தை இனங் காணக் கூடியதாக உள்ளது. விவசாயிகள் இரு தரப்பினரிடமிருந்துுங்களுக்குமுறையிட்டது.

அதையடுத்து களப் பயணம் மேற்கொண்டு அவதானித்தோம். அதன்போதே இதை இனங்காண முடிந்தது. இதற்குரிய தீர்வை வழங்குவதற்கு எம்மாலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'தாள் கொதி' புழுவின் தாக்கமானது 40, 45 நாள்களுக்குப் பின்னர் வெங்காயத்தின் குளியில் இனங்காணக் கூடியதாக உள்ளது.

வெங்காயத்தின் குமுழில் இதன் தாக்கம் இனங் காணப்படுவதனால் விதை வெங்காயத்திலும் இதன் பாதிப்பு உள்ளது.

விவசாயிகள் இது தொடர்பில் முழுமையான அறிவைப்பெற்று விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு இதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில், விளக்கங்களைப் பெற்று 'தாழ் கொதி' புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும்.

இந்தப் புழுவின் தாக்கம் காணப்படும் வெங்காயச் செய்கையில் கொக்குகளின் நடமாட்டத்தை அதிகளவு காணக்கூடியதாக இருக்கும். இதனைக் கொண்டே விவசாயிகள் வெங்காயச் செய்கையில் புழுவின் தாக்கத்தை இலகுவாக இனங்கண்டு கொள்ள முடியும். கொக்குகள் இருப்பதற்கான முழுக்காரணம் இந்த புழுக்களைப் பிடித்துத் தின்பதே.

விவசாய நிலங்களில் அல்லது வெங்காயச் செய்கையில் கொக்குகள் நடமாட்டம் காணப்படுவதாக இருந்தால், புழுவின் தாக்கம் இருக்கின்றது என்பதை விவசாயிகள் கருத்திற் கொள்ள முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிற பகுதிகளில் 50 ஏக்கர் அளவுக்கு இந்தப் புழுவின் தாக்கம் வெங்காயச் செய்கையில் காணப்படுகின்றது. புழுக்கள் உருவாகுவதற்கு முன்னர் அந்துப் பூச்சிகள் வெங்காயத்தின் தாளில் முதலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அங்கு அவை முட்டைகளைக் கொத்துக்கொத்தாக இடுவதனைக் காணக் கூடியதாக இருக்கும்.

அந்த முட்டையிலிருந்து உருவாக்கப்படும் குடம்பிகள் ஆரம்பத்தில் வெங்காயத்தின் இலையின் மேற்பகுதியில், பச்சையத்தை உணவாகக் கொள்வதனைக் காணக்கூடியதாக இருக்கும். விவசாயிகள் காலை மற்றும் மாலை நேரங்களில், வெங்காயத்தின் அடிப்பகுதியில் அவதானிக்கும்பொழுது இதன் தாக்கத்தை உணரக்கூடியதாக இருக்கும்

எனவே, அருகிலுள்ள கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களங்களுடன் தொடர்புகொண்டு இந்தப் புழுவின் தாக்கத்திலிருந்து வெங்காயச் செய்கையைப் பாதுகாத்துக்கொள்ள விவசாயிகள் முன்வரவேண்டும் என்று பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-111)

## நாவற்குழி ஜே.295 கிராமம் தத்தெடுப்பு


யாழ்ப்பாணம்,மார்ச் 17

வேதாத்திரி மகரிஷியின், உலக சமுதாய சேவா சங்கம், யாழ்ப்பாணத்தில் கிராமிய சேவைத் திட்டத்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைவாக நாவற்குழி ஜே.295 கிராம சேவகர் பிரிவை உள்ளடக்கிய கிராமத்தைத் தத்தெடுக்கவுள்ளது.

14 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வசதி நேரத்துக்கேற்ப, மனவளக்கலைப் பயிற்சி வழங்கி மருத்துவ முகாம், சுக நலச் செயற்பாடு, பசுமைக் கிராமம், தொழில் பயிற்சி உள்ளிட்டவற்றையும் வழங்கி, ஆறு மாதங்கள் முடிவில் ஆரோக்கியமான அமைதிக் கிராமமாக பிரகடனப்படுத்தி அவர்களிடமே கையளிக்கும் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மின்தடை



யாழ்ப்பாணம்,மார்ச் 17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் குறிப்பிட்ட சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று சுன்னாகம் இலங்கை மின்சார சபையின் மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையத்தின் மின்பொறியிலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

நாளை புதன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, லிங்ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்றெட் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் தவசிக்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், கூமாங்குளம் கிராமம், புதினியார் மகிழங்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் சிலாவத்து றையிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேச ங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவித்துள்ளார். (க)

## முற்போக்கு கூட்டணியின் சார்பில் 10 பேர் போட்டி!

கொழும்பு, மார்ச் 17

தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் பொதுத் தேர்தலில் 10 பேர் போட்டியிடவுள்ளனர் என்றும், கொழும்பு மாவட்டத்தில் பெண் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படலாம் என்றும் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோகணேசன் மேலும் தெரிவித்ததாவது:

'சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எனும் கூட்டணியின்கீழ்தான் தமிழ் முற்போக்கு கூட்டணி இம்முறை போட்டியிடுகின்றது.

கண்டி மாவட்டத்தில் வேலுகுமாரும், பதுளை மாவட்டத்தில் அரவிந்தகுமாரும், கம்பஹாவில் சசிகுமாரும், இரத்தினபுரியில் சந்திரகுமாரும், கேகாலையில் பரணியும் போட்டியிடவுள்ளனர். கொழும்பில் நான் களமிறங்குவேன்.

மற்றுமொரு வேட்பாளரும் போட்டியிடுவார். பெரும்பாலும் அவர் பெண் வேட்பாளராக இருக்கலாம்'- என்றார். (ம-44)

## மன்னாரில் சிங்கள மக்கள் வசிக்கும் காணி சிக்கலில்

### விரைவில் தீர்வு என்கிறது ஆணைக்குழு



மன்னார், மார்ச் 17

மன்னார் மடுப் பிரதேச செயலகப் பிரிவில் பூமலர்ந்தான் பகுதியில் சிங்கள மக்கள், தாம் வசிக்கும் காணிகளை தனியார் உரிமைகோரி ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளனர். இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று முறையிட்டுள்ளனர். அந்த ஆவணங்கள் தொடர்பாகப் பரிசீலித்து இரண்டு வாரங்களில் இதற்குத்தீர்வு காண்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

1974ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தென் பகுதி மக்கள் தங்கள் உடைமைகளையும், உறவுகளையும் இழந்த நிலையில் 1978ஆம் ஆண்டு மன்னார் மடுப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பூமலர்ந்தான் பகுதியில் அரச அதிகாரிகளால் குடியமர்த்தப்பட்டனர் என்று அங்குள்ள சிங்கள மக்கள் கூறுகின்றனர்.

உள்நாட்டுப் போர் காரணமாக தென்பகுதி மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்று மீண்டும் வந்து சொந்தப் பகுதிக்கு வர முடியாமல் வேறுபகுதிகளில் அகதிகளாக வாழ்ந்து வந்தனர், போர் நிறைவடைந்த பின்னர் அரச அதிகாரிகளால் சொந்த நிலங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

இந்தியன் வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்ட போதும். 2011 தொடக்கம் இன்று வரை தமக்குக் காணி உரிமப் பத்திரம் வழங்கப்படவில்லை. கேட்டாலும் தர மறுக்கின்றனர் என்றும் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக 2013, 2014 ஆண்டுகளின் பிரதேச செயலகத்தின் அதிகாரிகள், அரச அதிகாரிகளோடு தொடர்புகொண்டு ஜனாதிபதி, மாகாண காணி ஆணையாளர், காணி அமைச்சு, பிரதமர், போன்ற பல உயர் அதிகாரிகளை நாடி தங்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

இந்த நிலையிலேயே, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் உப காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் என்றும் தெரிவித்தனர். பல தடவைகள் விசாரணைகள் நடைபெற்றுள்ளன. நேற்றுமுன்தினமும் விசாரணை நடைபெற்றது. அதன்போதே இரண்டு வாரங்களில் தீர்வு காண்பதாகக் கூறப்பட்டது. (கு-56)

### வடக்கில் களமிறங்கியுள்ள

# கறுப்பாடுகளை கழுத்தறுப்போம்

## வேலுகுமார் எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 17

**வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பில் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கு வேட்டு வைப்பதற்காக 'தமிழர்' என்ற போர்வையில் சில கறுப்பாடுகள் தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளன. அத்தகைய கறுப்பாடுகளுக்கு வாக்குரிமை என்ற ஆயுதத்தின் ஊடாக மக்கள் கழுத்தறுப்புச் செய்ய வேண்டும்.**

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 25 ஆம் திகதி இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகின்ற நாளாகும்.

அதேபோல் தமிழ் மக்களின் அரசியல் இருப்பையும் தீர்மானிக்கப்போகும் நாளாகும்.

மதிநுட்பத்துடன் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.

2019ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் மத்தியில் முழுமையாக இனவாதத்தை விதைத்தே ராஜபக்ஷக்களும் அவர்களின் சவாக்களும் வாக்கு வேட்டை நடத்தினார்கள்.

அதுமட்டுமல்ல தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், தமிழ் பேசும் மக்களின் ஆதரவின்றி வெற்றிபெற்றுவிட்டோம் என்வும் மார்தட்டினார்கள்.

தற்போது பொதுத்தேர்தலிலும் அதே பாணியில் வாக்குவேட்டை நடத்துவதற்குத் தயாராகியுள்ளனர். நாட்டில் மீண்டும் காட்டாட்சி நடத்துவதற்காக மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை குறிவைத்துள்ளனர்.

இதற்காக வரத்தை மக்கள் வழங்கமாட்டார்கள் என்பது எமக்குத் தெரியும்.

மறுபுறத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைவடைய செய்து,

அவர்களின் குரல்வளையை நசுக்குவதற்கும் மொட்டு அணி திட்டம் தீட்டிவருகின்றது. இதன் காரணமாகவே வெற்றிபெற முடியாது எனத் தெரிந்தும், வாக்குகளைக் கூறுபோடுவதற்காக சில கைக்கூலிகள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இது இனத்துக்குச் செய்யும் பெரும் துரோகம் எனத் தெரிந்தும் அற்பசொற்ப சலுகைகளுக்காக, சரணாகதி அரசியலை நடத்துவதற்கு சில தமிழினத் துரோகிகள்முன்வந்து ள்ளார்கள்.

பிறப்பால் மட்டுமே தமிழர்களான அவர்கள், 'தமிழர்' என்ற அடையாளத்துடன் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் சில கறுப்பாடுகள் உலாவுகின்றன.

போலிவேடம்பூண்டு மக்கள் மத்தியில் வந்து உரிமையுடன் வாக்கு கேட்கலாம். சலுகைகளையும் வாரி வழங்கலாம். ஆனால், இந்த கறுப்பாடுகளுக்கு வாக்களிப்பதானது தற்கொலைக்குச் சமனானச்செயலாகும்.

இந்த கறுப்பாடுகளுக்கு இம்முறை தக்க பாடம் புகட்ட வேண்டும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறவும், தேசியப்பட்டியல் ஆசனத்துக்காகவுமே தாம் கறிவேப்பிலையாகப் பயன்படுத்தப்படுகின்றோம் என்ற உண்மை இந்த கறுப்பாடுகளுக்கு விரைவில் தெரியவரும்- என்றார். (ஒ.5,44)

## தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும்

### மணிவண்ணன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய இணைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன்.

வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கண்டனப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமலாக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் அரசு உடனடியாக பொறுப்புக்கூற வேண்டும். தற்போதைய ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷ காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என எவரும் தற்போதில்லை என்று அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இறுதிப் போரின்போது பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த தற்போதைய ஜனாதிபதி, எந்த அடிப்படையில் இவ்வாறு தெரிவிக்க முடியும்.

அவ்வாறு அவர் தெரிவித்ததன் மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நேரடியாக குற்றம் இழைத்திருக்கிறார் என்பது நிரூபணமாகிறது.

போர்க்குற்றங்கள் மற்றும் இனவழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஆயிரம் நாள்களுக்குமேலாக தெருத்தெருவாக நின்று போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த மக்களுடைய அவலங்களைக் கண்டு கொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களைத் தெரியாதவர்கள்போல் இருக்கின்றார்கள்.

மக்களுக்காகப் போராட வேண்டிய தமிழ் அரசியல் தலைவர்களே காணாமற் போயுள்ள நிலைதான் இங்குள்ளது.

இனிவரும் காலங்களிலாவது மக்களுக்காகக் குரல் கொடுக்கும், போராடும் தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறானவர்களை இனங்கண்டு உருவாக்க மக்கள் முன்வர வேண்டும் - என்றார். (ம-160)



## பற்கள்

முதுகெலும்பு உள்ள உயிரினங்களின் பற்கள், கல்சியத்தால் ஆனவை. வெண்மை நிறத்தில் கெட்டியாக இருக்கும். அவை, உணவை மென்று தின்ன உதவுகின்றன.

மாமிசம் சாப்பிடும் விலங்குகளுக்கு, பற்கள் கூர்மையாக இருக்கும். வேட்டையாடும் போது, இரையாகும் விலங்கின் மாமிசத்தை கிழிக்க உதவும். மற்ற விலங்குகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் பயன்படும்.

மிருகங்களின் கீழ்தாடையில் உள்ள, ஈறுகளில் பற்களின் வேர் பதிவதால் உறுதியாக இருக்கும். நீண்ட காலத்துக்கு நிலைத்து இருக்கும்.

உணவுமுறைக்கு ஏற்ப, விலங்குகளுக்கு பல் அமைப்பு உள்ளது.

தாவர உண்ணிகளான ஆடு, மாடு போன்றவற்றுக்கு, கடின தாவரங்களை வெட்டி அரைத்து உண்ண ஏற்றவாறு, தாடையின் பின்புற கடவாய்ப் பற்கள் அதிகமாகவும், உறுதியாகவும் அமைந்திருக்கும்.

மாமிச உண்ணிகளான, புலி, சிங்கம் போன்றவை, இறைச்சியை கிழித்து சாப்பிட வசதியாக, கோரைப்பற்கள் அதிகமாகவும் உறுதியாகவும் காணப்படும்.

பாலூட்டி விலங்குகளுக்கு, மூன்று நிலைகளில் பற்கள் அமைகின்றன. பால் பற்கள், ஆரம்ப நிலை பற்கள், வளர்ச்சியடைந்த பற்கள் என்று அவற்றைப் பிரிக்கலாம்.


குழந்தை பிறந்த ஆறு மாதங்களில், பல் முளைக்கத் துவங்கும். அதற்கு, பால் பற்கள் என்று பெயர். பின், அவை விழுந்து, உறுதியான பற்கள் முளைக்கும்.

சுறா மீனுக்கு, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, பற்கள் விழுந்து, புதிதாக முளைக்கின்றன. கொறித்துத் தின்னும் விலங்குகளான எலி, அணில் போன்றவற்றுக்கு, முகத்தின் கீழ்ப்புற அமைப்பு, பாதுகாப்பு கவசம் போல் காணப்படும். அதில், உறுதியான பற்கள் இருக்கும்.

புதை படிவங்களில் கிடைக்கும் விலங்குகளின் பற்களை ஆராய்ந்து, அவை வாழ்ந்த காலத்தை, தொல் உயிரின ஆய்வாளர்கள் கண்டறிகின்றனர்.



## இணைப்போம்



## பொது அறிவுத் தகவல்கள்

1. மனித உடலின் மிகப்பெரிய சுரப்பி எது ?
   ஈரல்
2. உலகில் உள்ள பறவைகளில் மிகப்பெரியது எது?
   தீக்கோழி
3. வெறும் கண்களால் பார்க்க முடியாத கோள் எது?
   யுரேனஸ்
4. உலகில் மிக நீண்ட நாள் வாழும் பிராணி எது?
   முதலை
5. மரத்தின் கிளைகளிலிருந்து வேர்களைத் தோற்றுவிக்கும் தாவரம் எது?
   ஆலமரம்
6. நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு எது?
   நோர்வே



## புள்ளிமான்கள்

ஒரு காட்டில் இரண்டு புள்ளி மான்கள் இணைப்பிரியாத நண்பர்களாக இருந்தன. எங்கு சென்றாலும் சேர்ந்தேதான் செல்லும். ஒரு நாள் மழை பெய்தது. மான்களால் விளையாட முடியவில்லை. மழை நின்ற பிறகு வெளியே சென்று பார்த்தன. அப்போது மேகத்திற்குள்ளிருந்து வெளியே வந்தது சூரியன். மான்கள் இரண்டும் சூரியனிடம், "இன்னும் மழை வருமா?" என்று கேட்டன. அதற்கு சூரியன், "நான் வந்து விட்டேனே!... இனி எப்படி மழை வரும்?" என்று சொல்லி மான்களைப் பார்த்து சிரித்தது.

"எங்களைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்?" என்றது ஒரு மான்.

"நீங்கள் இருவரும் ஒரே மாதிரியாக இருக்கிறீர்கள்! அது தான் எனக்குச் சிரிப்பு வந்து விட்டது! தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள்! நீங்கள் யார்?"

"நாங்கள் இருவரும் நண்பர்கள்!" என்றன புள்ளி மான்கள்.

"சரி! உங்களில் யார் திறமையானவர்?" என்று கேட்டது சூரியன்.

"நாங்கள் இருவருமே திறமையானவர்கள் தான்!" என்றன புள்ளிமான்கள்.


சூரியன் சற்று யோசித்துவிட்டு, ""சரி, அப்படியென்றால் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதோ அங்கு ஒரு மரம் இருக்கிறது பாருங்கள்!.... உங்களில் அந்த மரத்தை யார் முதலில் தொடுகிறாரோ அவர் தான் திறமையானவர்! இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நான் ஒரு பரிசு தருவேன்!" என்றது.

சூரியன் பரிசு தருவதாகச் சொன்னதும் இரண்டு மான்களும் ஓடத்தொடங்கின. ஆனால் மரத்தைத் தொடாமல் நின்று கொண்டிருந்தன.

சூரியன், "ஏன் மரத்தைத் தொடாமல் அப்படியே நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டது.

"நான் என் நண்பனுக்கு விட்டுக்கொடுத்து விட்டேன்!" என்றது ஒரு புள்ளிமான்.

மற்றைய புள்ளிமானும், "நானும் என் நண்பனுக்கு விட்டுக்கொடுத்து விட்டேன்!" என்று சொன்னது.



"அப்படியானால் அந்த உயர்ந்த பரிசில் உங்களுக்கு விருப்பமில்லையா?... இப்படி யாருமே தொடாமல் இருந்தால் எப்படிப் பரிசளிப்பது?"

"நாங்கள் இணை பிரியாமல் எப்போதும் நட்புடன் இருக்க விரும்புகிறோம்.... அந்த எண்ணமே எங்களுக்குப் பரிசு!"

இதைக் கேட்டு பெரிதும் மகிழ்ந்த சூரியன், "அழகான மான்களே! உங்கள் ஒற்றுமையைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் இருவரும் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். உங்களுக்கு நான் ஒரு வானவில்லை பரிசாகத் தருகிறேன். நீங்கள் எப்போது விரும்புகிறீர்களோ அப்போதெல்லாம், 'வானவில்லே வருக' என்று சொன்னால் போதும். வானத்தில் அழகான வானவில் தோன்றும்!... நீங்கள் அதைப்பார்த்து ரசிக்கலாம்!" என்று சொல்லிவிட்டு சூரியன் விடை பெற்றது.

மான்கள் இரண்டும் மகிழ்ந்தன. அவற்றிற்கு விருப்பமான நேரத்தில் வானவில்லை வரச்செய்து பார்த்துப் பார்த்து ரசித்தன!


**நண்பர்களே விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் வாழ்க்கை வளமாக இருக்கும்.**

### இங்குள்ள உயிரினங்களின் விடுபட்ட பாகங்களைப் பொருத்துங்கள்




## பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு
அங்கே துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு
உடன் அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு
பாலை நன்றாய் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு
மடிமுட்டி குடிக்குது கன்றுக்குட்டி



எனக்கொரு டவுட்டு

இந்த உலகம் உன்னை
ஒருநாள் உற்று நோக்கும்..!
அன்றைக்கு உனக்கு
கொரனோ வைரஸ்
வந்திருக்கும்.!

10 பேருடன்
மூடிய லிப்டில்,
ஒருவர் மட்டும்
இருமினார்

**ஒரு வரி திகில்கதை**

கொரோனாவுக்கு ஆயிரம்
கண்கள்

உலகம் சுற்றும்
கொரோனா


எனை நோக்கிப் பாயும்
கொரானா

கொரானா அதிகாரம்
ஒன்று

"கொரானா கவ்வும்

நல்லா இருந்த ஊரும்
நாசமாக்கிய கொரானாவும்.

கொரனாவுக்கு ஆயிரம்
கைகள்









# படம் தோற்றால் விமர்சிப்பதா?

## சமந்தா வருத்தம்

தமிழில் 'பாணா காத்தாடி' படத்தில் அறிமுகமாகி விஜய், சூர்யா, தனுஷ், சிவகார்த்திகேயன் உள்ளிட்ட கதாநாயகர்களோடு ஜோடி சேர்ந்த சமந்தா, தெலுங்கிலும் முன்னணி நடிகையாக இருக்கிறார். தமிழில் விஜய் சேதுபதி, திரிஷா ஜோடியாக நடித்து திரைக்கு வந்து வசூல் குவித்த 96 படத்தை தெலுங்கில் ரீமேக் செய்தனர். அந்த படத்தில் திரிஷா கதாபாத்திரத்தில் சமந்தா நடித்தார்.

படத்துக்கு ஜானு என்று தலைப்பு வைத்தனர். ஆனால் படம் எதிர்பார்த்த வரவேற்பு இல்லாமல் தோல்வி அடைந்ததாக கூறப்பட்டது. தெலுங்கு இணையதளங்கள் சமந்தாவை தோல்வி பட நடிகை என்று விமர்சித்தன.

தன்னை விமர்சித்தவர்களுக்கு சமந்தா தற்போது பதில் அளித்துள்ளார். அவர் கூறும்போது, "ஒரு கதாநாயகன் தொடர்ந்து 3 தோல்வி படங்கள் கொடுத்தாலும், அவரது படங்கள் வரும்போது ரசிகர்கள் தியேட்டர்களில் சென்று பார்க்கிறார்கள். ஆனால் கதாநாயகியை குறை சொல்கிறார்கள். கதாநாயகனுக்கு இணையாக கதாநாயகிகளுக்கு சம்பளமும் கொடுப்பது இல்லை. நடிகைகளும் நடிகர்களைப்போல் கடுமையாக உழைக்கத்தான் செய்கிறார்கள்" என்றார். தற்போது சமந்தா விக்னேஷ் சிவன், அஸ்வின் சரவணன் இயக்கும் படங்களில் நடிக்கிறார்.




mohanram.ko
@mohanramko

'நம்ம கையில என்ன இருக்குனு' நினைக்காம
கைகழுவினாலே
கொரானாவை விரட்டலாம்

எனக்கொரு டவுட்டு

கொரனோவைவிட
கொடுமையானது
எல்லாருக்கும் லீவு விட்டுட்டு
பிரைவேட் கம்பெனில
வேலை
பார்க்குறவங்களுக்கு
மட்டும் வேலை
வைக்குறதுதான்







ஆசையாய் முத்தம் கொடுக்க சென்றால்..
1/2 கிலோமீட்டர் விலகி ஓடுகிறாள்...
கொரோனா வைரஸ் பரிதாபங்கள்



தம்பி ஏன் கியூவில நிக்கிறியள்
கொரோனோ நோயாளியளை அடையாளம் கண்டுட்டாங்களாம். யாழ்ப்பாணத்துக்கும் வந்தா கஸ்ரம் தானே....
அதுக்கு ஏன் பெற்றோலுக்கு கியூவில நிக்கிறியள்.
ஒரு வேளை கொரோனா பரவிச்செண்டா வெளியில வெளிக்கிட அரசாங்கம்விட மாட்டுது. 2, 3 கிழமைக்கு வீட்டுக்க தான் இருக்க வேண்டி வரும் எண்டு சனம் கதைக்குது. அதுதான். தட்டுப்பாடு வந்தாலும் எண்டு. 2, 3 கிழமைக்கு வீட்டுக்கயே இருக்க வேண்டிவரும் எண்டா வெளியில வெளிக்கிட மாட்டியள் தானே. பிறகு ஏன் கான் கணக்கில பெற்றோல் வாங்கிறியள். !!!!!

# பங்குனி மாத ராசி பலன்கள்...!



## அதிர்ஷ்டம் தேடி வரப்போவது எந்த ராசிக்குத் தெரியுமா?

இந்தப் பங்குனி மாதம் அதிர்ஷ்டம் எப்படி இருக்க போகுது என்பதைப் பற்றி பார்ப்போம்.

### சிம்மம்

கம்பீரமும், அதிகார தோரணையும் இயற்கையிலே அமைந்த சிம்ம ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 8 ல் சஞ்சரிப்பதால் எதிலும் கவனம் தேவை. எடுக்கும் முயற்சிகளில் சிறு, சிறு தடை பிரச்சினைகள் வந்தாலும், விடா முயற்சியுடன் செயல்படுங்கள். உங்கள் பேச்சால் மற்றவர்களைக் கவருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் நிலவும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். உடன்பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பார்கள். விடாமுயற்சியே வெற்றி தரும் என்பதை உணரும் காலம். குழந்தைகளால் சிறு, சிறு பிரச்சினை வந்தாலும் கவலை கொள்ளத் தேவையில்லை. எதிரிகள் விலகிச் செல்வார்கள். பிரபலங்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும்.

### கன்னி

எந்த சூழ்நிலையிலும் இன்முகம் மாறாமல் பழகும் கன்னி ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் புதன் உங்கள் ராசிக்கு 6ல் சஞ்சரிப்பதால் மாத முற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிரிகளால் பிரச்சினைகள் வர வாய்ப்புள்ளதால் எதிலும் விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது. வீண் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். மாத பிற்பகுதியில் அனைத்தும் சுமுகமாக முடியும். பேச்சில் கவனம் தேவை. எதிர்பாராத தன வரவு உண்டு. விடாமுயற்சியால் வெற்றி பெறுவீர்கள். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உங்கள் விடாமுயற்சியும், அயராது உழைப்பும் மற்றவர்களால் பாராட்டப்படும். உங்கள் நீண்ட நாள் முயற்சிகள் நிறைவேறும்.

### துலாம்

மற்றவர்களை மகிழ்வித்து தானும் மகிழ்வதில் அதிக ஈடுபாடுடைய துலாம் ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சுக்கிர பகவான் உங்கள் ராசிக்கு 7இல் இருந்து சம சப்தமாக உங்கள் ராசியைப் பார்ப்பதால் உங்கள் தனித்திறன் வெளிப்படும். உங்கள் ஆளுமை அதிகரிக்கும். உடன் பிறப்புகளால் சிறு மனஸ்தாபங்கள் உருவாகும். மனதில் தைரியத்தையும், தன்னம்பிக்கையும் வளர்த்துக் கொள்வது நல்லது. எதிர்காலத்தைப் பற்றி பயம், வீண் கவலையை தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகள் விலகி செல்வார்கள். திடீர் தனவரவு மற்றும் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உண்டாகும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். சிறு தடைகள், பிரச்சினைகள் இருந்தாலும் அனைத்தையும் கடந்து வெற்றி பெறுவீர்கள். பணவரவு திருப்தியளிக்கும். உங்கள் திறமை உயரதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும். புதிய முயற்சிகள் கைகூடும்.

### விருச்சிகம்

எண்ணிய எண்ணத்தை செயலாக மாற்றுவதில் வேகமுடைய விருச்சிக ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் செவ்வாய் பகவான் உங்கள் ராசிக்கு 2ல் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பொருளாதார நிலையில் நல்ல மேம்பாடு அதிகரிக்கும். உங்களுடைய செயல்களால் மற்றவர்களை எளிதில் வசீகரிப்பீர்கள். உங்கள் ஆளுமை திறன் வெளிப்படும். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எதிலும் உற்சாகமாக ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். சிறு, சிறு பிரச்னை வந்தாலும், பிற்பகுதியில் அனைத்தும் சுமுகமாக முடியும். மாணவர்கள் கல்வியில் சாதனை படைக்கும் காலம். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உயரதிகாரிகள் மற்றும் சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். புதிய பொறுப்புக்கள் தேடி வரும்.

# கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டு வந்த பெண்ணின் அனுபவ பகிர்வு

"கொரோனா வைரஸ் தங்களைப் பாதிக்காது என்று சில மக்கள் நினைப்பதை நான் அறிவேன். ஆனால், ஆரம்ப காலத்தில் பரிசோதனை செய்யாமல் விட்டதுதான் நகரத்தில் பலருக்கும் கொரோனா பரவ காரணமாக அமைந்தது என நம்புகிறேன்."

வாஷிங்டனில், எலிசபெத் ஷ்னெய்டர் என்பவர் வசித்து வருகிறார். 37 வயதான இவர் பயோ இன்ஜினீயரிங் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். இவரும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு, தற்போது அதிலிருந்து மீண்டு வந்துள்ளார். இந்த வைரஸ் குறித்து அச்சத்தில் இருக்கும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த நோயுற்றிருந்த போது ஏற்பட்ட தனது அனுபவத்தை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார்.

எலிசபெத் கடந்த பெப்ரவரி மாதம் விருந்து ஒன்றுக்குச் சென்று திரும்பியுள்ளார். அங்குதான் இந்தக் கொரோனா தொற்று தனக்கு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று நம்புகிறார். ஆனால், விருந்தில் யாருக்கும் தும்மல், இருமல் போன்ற அறிகுறிகள் இருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். அனைத்து மனிதர்களையும் தவிர்ப்பதைத் தவிர இந்தக் கொரோனா வைரஸிலிருந்து தப்பிக்க வேறு வழியே இல்லை என்பது அவருடைய கருத்து.

தன் உடலில் ஆரம்பகட்ட அறிகுறிகள் குறித்து அவர் பேசும்போது;

"ஒருநாள் காலையில் நான் கண் விழித்தபோது சோர்வாக உணர்ந்தேன். வழக்கமாக வேலைக்குச் செல்லும்போது இந்த மாதிரியான சோர்வு ஏற்படுவது சாதாரண விஷயம் தான் என்று நம்பினேன். இருப்பினும், மதிய வேளையில்



காய்ச்சல், உடல் மற்றும் தலைவலியை அதிகமாக உணர்ந்தேன். அலுவலகத்தைவிட்டு வெளியேறி வீட்டுக்குச் சென்றேன். அன்றைய இரவு எனக்கு 103 டிகிரி உடல் வெப்பநிலை இருந்தது. கடுமையான குளிர் எனக்கு இருந்தது. காய்ச்சல் மருந்துகளை எடுத்துக்கொண்டேன். ஒருவேளை உடல்நிலை தீவிரமானால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல நண்பர் ஒருவரையும் அழைத்திருந்தேன். ஆனால், உடல் வெப்பநிலை படிப்படியாகக் குறையத் தொடங்கியது" என்று கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் குறித்த செய்திகளைத் தொடர்ந்து எலிசபெத் கவனித்து வந்துள்ளார். இருமல், தும்மல் மற்றும் மூச்சுத் திணறல் போன்ற பொதுவான அறிகுறிகள் அவருக்கு இல்லாதமையால், தனக்குக் கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லை என நினைத்துள்ளார். ஆனால், தனக்கு ஏற்பட்ட காய்ச்சல் வழக்கமானது இல்லை என்றும் அவருக்கு எண்ணம் ஏற்பட்டுள்ளது. எனவே, சியாட்டில் உள்ள மருத்துவப் பரிசோதனை நிலையத்தில் தனது பரிசோதனை மாதிரிகளை அனுப்பி வைரஸ் குறித்த சோதனையை மேற்கொண்டுள்ளார். மருத்துவர்களும் இவருக்கு மருத்துவ கிட் ஒன்றை அனுப்பியுள்ளது. இந்த நிலையில், சில நாள்களில் அவருக்குக் கொரோனா தொற்று இருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.

"எனக்கு ஆச்சரியமாக இருந்தது" என்று கூறும் எலிசபெத், "நான் இதைச் சாதாரணமாக நினைத்தேன். முடிவை ஏற்றுக்கொண்டு சிரித்தேன். ஆனால், என்னுடைய தாயிடம் இதைக் கூறியபோது அவர் அழுதார். கடுமையாக நான் பாதிக்கப்பட்டிருந்தால் சாதாரணமாக உணர்ந்திருக்க மாட்டேன். அறிவியல்பூர்வமாக இது மிகவும் சுவாரஸ்ய மானது. இறுதியாக நானும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டேன் என்பதை சோதனைகள் உறுதிப்படுத்தியது" என்று தெரிவித்தார்.

தொடக்கம் முதலே முறையான பாதுகாப்புடன் அவர் இருந்து வந்ததால், அறிகுறிகள் ஏற்கெனவே அவரிடம் குறையத் தொடங்கியுள்ளன. எனினும், சுமார் ஒரு வாரம் சுகாதாரத் துறை அதிகாரிகள் அவரை தனிமையில் இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளனர்.

அவரும் தன்னைத் தனிமைப்படுத்தி வசித்து வந்துள்ளார். பின்னர், முற்றிலுமாக அறிகுறிகள் நீங்கியுள்ளன. ஆனால், வீட்டில் இருந்தபடியே வேலை செய்து வருகிறார். பெரிய கூட்டங்களையும் வெளியில் செல்வதையும் தவிர்த்து வருகிறார். அவரிடம் இருந்தது போன்ற அறிகுறிகளுடன் பயத்தில் இருப்பவர்களுக்குத் தனது அனுபவம் ஆறுதல் அளிக்கக்கூடும் என நம்பிக்கையுடன் முகநூலில் தனது அனுபவத்தை நண்பர்கள் கூறியதற்கு ஏற்ப பகிர்ந்துள்ளார்.



# இன்றைய நாள்

**மேடம்:** பணிகள் குறிப்பிட்ட கால அவகாசத்தில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் சிறு அளவில் போட்டி இருக்கும். பணவரவை அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படுத்துவீர்கள். குடும்ப தேவை நிறைவேறும்.

**இடபம்:** சோதனைகளை வெல்ல மதிநுட்பத்துடன் பணிபுரிவீர்கள். தாயின் அன்பு, ஆசி பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் புதிய அந்தஸ்து கிடைக்கும்.

**மிதுனம்:** முன்னர் செய்த நற்செயலுக்கான நன்மை தேடிவரும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதலாக பணிபுரிவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**கடகம்:** பெருந்தன்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய முயற்சியை மேற்கொள்வீர்கள். சீரான அளவில் பணவரவுடன் நன்மையும் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** எதிர்வரும் சிரமங்களை எளிதாக சரிசெய்வீர்கள். முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வீர்கள்.

**கன்னி:** மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். குடும்பத்தில் நிம்மதி, மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னர் செய்த அபிவிருத்தி பணி நல்ல பலனை கொடுக்கும்.

**துலாம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தரவேண்டாம். செயல்களில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். முக்கியச் செலவுக்குத் தேவையான பணம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் பெருமிதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் வளர்ச்சியை கண்டு பிறர் வியப்படைவர். இயன்ற அளவில் அறப்பணி செய்வீர்கள்.

**தனுசு:** உங்கள் செயலை சிலர் விமர்சிப்பர். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உரிய நற்பலனை பெற முடியும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** எதிலும் நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். பெண்கள் வீட்டுத் தேவைகளை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவர்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல்களை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும். உபரி பணவரவு கிடைக்கும். குடும்பத்தினருடன் விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மீனம்:** அடுத்தவர் விஷயத்தில் கருத்து சொல்வதை தவிர்க்கவும். குடும்பத் தேவை பூர்த்தியாகும். தொழிலில் உருவாகும் இடையூறை சரிசெய்வதால் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.



# ஒரே நாளில் 750 இறப்பு!

பீஜிங், மார்ச் 17

கொரோனா வைரஸ் காரணமாக உலக அளவில் நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 750 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் வுகான் மாகாணத்தில் ஏற்பட்ட கொரோனா நாடு முழுவதும் பரவியுள்ளது. சுமார் 150 நாடுகளில் கொரோனாவின் தாக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சீனாவில் தற்போது கொரோனா கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும் சீனாவுக்கு வெளியில் அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக தென்கொரியா, ஈரான், இத்தாலி நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 750 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

ஒட்டுமொத்த உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 700ஆக அதிகரித்துள்ளது. சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

## கொரோனா அற்ற நாடானது சூடான்

கார்ரொம், மார்ச் 17

உலகில் கொரோனா அற்ற நாடாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளது சூடான்.

வறுமைக்குப் பெயர்போன சூடான் அவ்வப்போது வைரஸ்களாலும் பாதிக்கப்படுவதுண்டு. சூடானின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

உதாரணமாக எபோலா வைரஸால் சூடான் அதிகம் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கொரோனா பாதிப்பு தற்போது இல்லாத நாடாக சூடான் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)





## மூடப்பட்டது அல்அக்ஷா

ஜெருசலேம், மார்ச் 17

கொரோனா அச்சம் காரணமாக உலகின் மூன்றாவது புனித மசூதியான அல் அக்ஷா மசூதி தற்காலிகமாக மூடப்பட்டது.


இந்த புனித மசூதி இஸ்ரேல், பாலஸ்தீனம் அருகே பழைமை வாய்ந்த ஜெருசலேம் நகரில் அமைந்துள்ளது. இறைத் தூதர் முகம்மது, தனது இரவு பயணத்தின் போது மெக்காவின் பெரிய மசூதியிலிருந்து அல் அக் ஷாவுக்குச் சென்றார் என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர். இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த இந்த மசூதி தற்போது மூடப்பட்டுள்ளது. (ம)

## ஒட்டுமொத்த இத்தாலிக்கும் கிருமி நீக்க நடவடிக்கை!

கொரோனாவின் தாக்கம் கட்டுக்குள் அடங்காமல் போனதை அடுத்து இத்தாலி முழுவதும் கிருமிநீக்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் இத்தாலியில் நாளுக்குநாள் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன. 25 ஆயிரத்து 300 கொரோனா நோயாளர்களைக் கொண்டுள்ள இத்தாலி சுமார் 2 ஆயிரம் உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளது. இதையடுத்து கொரோனா கிருமிகளை அழிக்கும் திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தியுள்ளது இத்தாலி.

இத்தாலியின் அனைத்து வீடுகளும், பொது இடங்களும் சுகாதாரத் தொழிலாளர்களால் சுத்தமாக்கப்பட்டு வருகின்றன. (ம)



# அய்லானின் இறப்பு தொடர்பில் மூவருக்கு 125 ஆண்டுகள் சிறை

அங்காரா, மார்ச் 17

2015ஆம் ஆண்டு சிரிய அகதிகள் சென்ற படகு துருக்கிக் கடலில் கவிழ்ந்த விபத்தில் உலகை உலுக்கிய குழந்தை அய்லானின் இறப்புத் தொடர்பான வழக்கில் மூவருக்கு 125 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு போர் நடந்து வரும் சிரியாவில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். இவர்கள் மத்திய தரைக்கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் படகுகளில் பயணம் செய்து ஐரோப்பிய நாடுகளை அடைகின்றனர். பல நேரங்களில் இந்த ஆபத்தான பயணங்கள் விபத்தில் முடிந்துவிடுகின்றன.

அந்த வகையில் கடந்த 2015ஆம் ஆண்டு சிரிய அகதிகள் சென்ற படகு துருக்கிக் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 வயது ஆண் குழந்தையான அய்லான் உயிரிழந்தான்.

குழந்தை அய்லான் துருக்கி கடற்கரையில் முகம் புதைந்த நிலையில் பிணமாகக் கிடந்த புகைப்படம் உலகையே உலுக்கியது.

அகதிகளின் துயரங்களை விவரிக்கும் விதமாக அமைந்த இந்த புகைப்படம் சர்வதேச அளவில் பல்வேறு விவாதங்களைக் கிளப்பியது.

அகதிகளை அழைத்துச் சென்றமை தொடர்பில் மூவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. அவர்கள் மூவருக்கும் தலா 125 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)



# ஈஸ்டர் கொண்டாட்டங்களுக்கு மக்கள் நேரில் வரவேண்டாம்!

## வத்திக்கான் கோரிக்கை

ரோம், மார்ச் 17

ஈஸ்டர் கொண்டாட்டங்களுக்கு மக்கள் நேரில் வரவேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளது கத்தோலிக்க மக்களின் தலைமையகமான வத்திக்கான். இத்தாலியில் கொரோனா தொற்று மிகையாக ஏற்பட்டுள்ளது. நாளுக்கு நாள் நோயின் பரம்பல் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையிலேயே ஈஸ்டர் கொண்டாட்டங்களுக்கு மக்கள் நேரில் வரவேண்டாம் என்றும் தொலைக்காட்சிகளில் திருப்பலியைப் பார்க்குமாறும் வத்திக்கான் கேட்டுள்ளது. (ம)




## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜராஜேஸ்வரி சிவகுமார்




இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை புகுந்த இடமாகவும், தற்போது கனடா றொரண்டோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜராஜேஸ்வரி சிவகுமார் 13.03.2020 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராசசேகர பிள்ளை வீதியைச் சேர்ந்த கதிர்காமநாதன் (தம்பி வாத்தியார்) செல்லம்மா தம்பதிகளின் இரண்டாவது புத்திரியும், சிவகுமாரின் அன்பு மனைவியும், பிரம்மியா, ஜனகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தனுசியனின் அன்பு மாமியாரும், அனின்ராவின் அன்புப் பேர்த்தியும், லலிதாம்பாள், காலஞ்சென்ற ஞானகலாம்பாள் மற்றும் சிவகனா (ஓய்வுநிலை ஆசிரியர்), ஆனந்தகுமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் பஞ்சாயுதன், காலஞ்சென்ற தேவநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: வை.கதிர்காமநாதன் (தம்பி வாத்தியார்) குடும்பம்.**

(CS/31962)(11,17)

**021 224 8774, 00416 4925 107**

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் க. கர்ணன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### இ.வே.கனகசபாபதி

அவர்கள் 15.03.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுகாதார மருத்துவ அதிகாரியும் உத்தியோகத்தர்களும். சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், சாவகச்சேரி.**

(N/12836)(11,17)



## ஆறுமுகம் சொக்கலிங்கம்

வேலணை 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சொக்கலிங்கம் 15.03.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதிகளின் ஆசை மருமகனும், சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், யோகாம்பிகை, தவமலர், லோகேஸ்வரி, விக்னேஸ்வரி, விக்னேஷ்வரன், காலஞ்சென்ற கணேஸ்வரன் மற்றும் ரட்ணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசரெத்தினம், காலஞ்சென்ற அரசரத்தினம் மற்றும் சண்முகராசா, சிவகுமார், சத்தியபாமா சிவதாஸ் விசயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயன் அர்ச்சனா, துஷ்யந்தன், Dr.துஷ்யந்தி, துசாந்தன் தர்சிகன், தாரணி, தனுசியன், ஜிந்துசன், வேனுயா, சிவானுயன், சிவஜன், சிவகஜன், சிவகஜானா, வியாசன், விதுனன், வைஷ்ணவன், சிந்துஜன், நிரோஜன், வினோஜன், சாருஜன், நந்தினி, நகுலன், மேகலா, யுனிற்றா, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும், டிசாந், கேசவி, ஆர்ஜன், ஆதேஷ், அஸ்மிதா, அஸ்வின், திரித்தீப் ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கணேசன், பத்மநாதன் மற்றும் நித்திய லட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், பசுபதி, நாகேசு, மாணிக்கம் மற்றும் கணபதி வள்ளியம்மை, பார்வதி, நாகரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்.**

(CS31963)(11,17)

**076 131 1784, 077 341 3086**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் பதினான்காம் ஆண்டு நினைவலைகளும்



பிறப்பு:29.06.1934
இறப்பு:29.03.2019

பிறப்பு:25.07.1925
இறப்பு:26.03.2006

**அமரர் திருமதி ஆசைப்பிள்ளை ஆனந்தம்**
**அமரர் சின்னப்பு ஆசைப்பிள்ளை**

திதி : 17.03.2020 திதி : 23.03.2020

காத்திருக்கக் கண்ணீரோடு ஓடியது ஓராண்டு
நினைத்தபோது ஈரமானது கண்கள் கனமானது இதயம்.
மனம் ஏங்கித் தவிக்கிறது உங்களைக் காண.
ஆனால் புத்தி சொல்கிறது நீங்கள் இல்லையென்று
எம்மோடு நீங்கள் வாழ்ந்த நினைவுகளை மீட்டு
வாழும் எங்களுக்கு என்றென்றும் நிலைத்திருக்கட்டும்
தங்கள் நிறைவான ஆசிகள்.
என்றும் தங்கள் இருவரது ஆத்மாக்களும் சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் தங்கள் நினைவுகளுடன்

பலாலி வீதி,
கோண்டாவில்,

**குடும்பத்தினர்.**

(N 12837) (10)



# யாழ். மாவட்ட அணி வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச் 17

இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் வவுனியா,மன்னார் மாவட்ட இணைந்த அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வவுனியா,மன்னார் மாவட்ட இணைந்த மகளிர் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா,மன்னார் மாவட்ட இணைந்த மகளிர் அணி 27.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் சகானா 18 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் தேவகி 5இலக்குகளையும், நிதர்சனா,சாணு தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணி 38.2 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. அணி சார்பில் தயாஜினி 36 ஓட்டங்களையும்,சோபனா 32 ஓட்டங்களையும் சாணு 23 ஓட்டங்களையும், நிதர்சனா ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கம்சா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய வவுனியா,மன்னார் மாவட்ட இணைந்த மகளிர் அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 45 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அணி சார்பில் திசாளினி அதிகபட்சமாக 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நிதர்சனா 4 இலக்குகளையும்,தேவகி 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)

# கால்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச்17

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சென்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் அராலி ஏ.எல். விளையாட்டுக்கழக அணி, ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கலைநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் அராலி ஏ.எல். விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அராலி ஏ.எல் விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜெயந்தன் 2கோலையும்,கிருசாந் ஓர் கோலையும், கலைநகர் விளையாட்டுக்கழக அணி சார்பில் மணாளன் ஓர் கோலையும் பதிவு செய்தனர்.

மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரசன்னா 3கோலையும்,கஜகோபன் 2 கோலையும்,கர்சன் ஓர் கோலையும், நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் வபின்ராஜ் ஓர் கோலையும் பதிவு செய்தனர். (23)



ஊரெழு றோயல் வி.க.



அராலி ஏ.எல் வி.க.



# சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 17

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வருடம் தோறும் நடத்தப்படும் ஆரோக்கியமான வாழ்வுக்கான விளையாட்டுப் போட்டிகளில் 2020ஆம் ஆண்டுக்கான ஆரோக்கியத்துக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் வைத்தியசாலை பணிப்பாளர் ,பிரதிப்பணிப்பாளர் மற்றும் உயரதிகாரிகள், பணியாளர்கள், உத்தியோகத்தர் உட்பட100 மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்.

இந்தப் போட்டி வைத்தியசாலையின் பிரதான முன்வீதி வழியாக பழைய பொஸிஸ் நிலைய வீதி, பொதுநூலக வீதி, துரையப்பா விளையாட்டு அரங்கு வீதியூடாக யாழ். பண்ணை வீதியால் சென்று அல்லைப் பிட்டிக்கு சமீபமான தூரம் வரை சென்று மீண்டும் ஆரம்ப இடத்தை வந்தடைந்தது. (39)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மகிதரனின் ஆதரவுடன் நடைபெறும் மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால் பந்தாட்டச் சுற்றுத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி அரையிறுதியாட்டத்துக்கு தகுது பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 3 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 4.45 மணிக்கு இடம்ற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி முதற்பாதி ஆட்ட முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதிஆட்ட முடிவில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

ஆட்டநேர முடிவில் ஆனைக்கோட்டை யூனியன் விள்ையாட்டுக்கழக அணி 3 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அணி சார்பில் கிரியோண் 3 கோல்களையும் பதிவு செய்தார். (23)



## கொரோனா வைரஸ் தாக்கம்
# இடைநிறுத்தப்பட்டது மன்னார் பிறீமியர் லீக்

மன்னார், மார்ச் 17
மன்னார் மாவட்ட கால் பந்தாட்ட லீக்கி னால் தற்போது இடம்பெற்ற வருகின்ற 'மன்னார் பிறீமியர் லீக்' கால் பந்தாட்ட சுற்றுப் போட்டி கொரோனா வைரஸ் தாக் கம் காரணமாக தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக மன்னார் கால்பந் தாட்ட லீக்கின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கை யில்;

நாடு முழுவதும் மிகுந்த அச்சத்தை ஏற் படுத்திய 'கொரோனா வைரஸ்' தாக்கம் தற்போது இலங்கையையும் தாக்கியுள் ளது. இந்த நிலையில் இலங்கை அர சாங்கம் பல்வேறு தடுப்பு நடவடிக்கை களை முன்னெடுத்து வருகின்றது. பாடசாலைகளுக்கு விடுமுறை வழங் கியுள்ளதோடு, மக்கள் ஒன்று கூடும் நிகழ்வுகளை தடை செய்யவும் அர சாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக மன்னார் மாவட்ட கால் பந்தாட்ட லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்று திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்படு கின்றது.

இந்த லீக் சுற்றுப் போட்டி கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகியது. இது வரை 25 சுற்றுக்கள் இடம் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (56)





## கரவெட்டி பி. செ. மகளிர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது

பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தில் மாவட்டச் சம்பியனாகியது கரவெட்டி பிர தேச செயலக மகளிர் அணி.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கி டையில் மாவட்ட மட்டக் கடற்கரைக் கரப்பந் தாட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் வல்வை உதயசூரியன் மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. 3 செற்களைக் கொண்ட இறுதி யாட்டத்தில் 21:17, 21: 18 என்ற புள்ளிக ளைப் பெற்று 2:0 என்ற நேர்செற்றில் வெற்றி பெற்று கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனாகியது . (108)

## நெடியகாடு வி.க. அடுத்த சுற்றுக்குள்

வல்வை விளையாட்டுக்கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நெடியகாடு விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் வல்வை தீருவில் விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆழியவளை அரு ணோதயா விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஆட்டநேர முடிவில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக நெடியகாடு விளையாட்டுக் கழக அணி வீரர் கிருபாகரன் தெரிவு செய் யப்பட்டார். (23)

## பொலிகை பாரதி வி.க. அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 17
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணி வீரர் றொபின் தெரிவு செய்யப்பட் டார். (23)

## மகுடம் சூடியது கொலின்ஸ்

கரணவாய், மார்ச் 17
குப்பிளான் ஞானகலா மென் பந்து கிரிக்கெட் போட்டியில் கிண்ணம் வென்றது கரண வாய் கொலின்ஸ் விளையாட் டுக் கழக அணி.

குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்திய கிரிக் கெட் சுற்றுப் போட்டியின் இறு தியாட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் நோ நேம் அணியை எதிர்த்து கொலின்ஸ் விளை யாட்டுக்கழ அணி மோதி யது. 10 பந்துப் பரிமாற்றங் கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் ஜெயச்சந்தி ரன் 25 ஓட்டங்களையும், துவாரகன் 17 ஓட்டங்களை யும் சுகந்தன் 11 ஓட்டங்களை யும் அதிகூட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நோ நேம் அணி 9.1 பந்துப்ப ரிமாற்றங்களில் சகல இலக் குகளையும் இழந்து 58 ஓட் டங்களை மாத்திரமே பெற்று 8 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது.

பந்து வீச்சில் அனுரதன் ஹெட்ரிக் சாதனையுடன் 6 இலக்குகளைக் கைப்பற்றி னார். விமல்ராஜ் மற்றும் துவாரகன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றி னர்.

தொடராட்ட நாயகனாக கொலின்ஸ் விளையாட்டுக் கழக வீரர் திருபரன், ஆட்ட நாயகனாக அதே அணி யைச் சேர்ந்த ஜெயச்சந்தி ரன், சிறந்த பந்துவீச்சாளராக அனுரதனும் தெரிவு செய்யப் பட்டனர். (108)



## 25 ஆவது மன்னார் பிறீமியர் லீக் ஆட்டம் சமநிலையில்

மன்னார், மார்ச் 17
மன்னார் மாவட்ட கால் பந் தாட்ட லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமி யர் லீக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் 25ஆம் நாள் சுற்று போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை இரவு 7.45 மணிக்கு மின் ஒளியில் மன் னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் பள்ளிமுனை கால்பந்தாட்ட கழக அணியை எதிர்த்து, எஸ். எல். எப் கால் பந்தாட்ட கழக அணி மோதியது.

இதன் போது பள்ளிமுனை கால்பந்தாட்ட கழக வீரர் நிது ஸன் ஒரு கோலையும், எஸ். எல். எப் கால்பந்தாட்ட கழக வீரர் எடிசன் ஒரு கோலை யும் அடித்தனர். இதனால் இறுதி வரை இரு அணிகளா லும் மேலதிக கோல்கள் எதுவும் பெற முடியாது போக இறுதியில் ஆட்டம் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடி வடைந்தது. (56)



## இடைக்காடு மகா வித்தியை வீழ்த்தி சம்பியனானது இந்து மகளிர் கல்லூரி

கரணவாய், மார்ச் 17
யாழ். வலயப் பாடசாலைக ளுக்கிடையிலான 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி யில் யாழ். இந்து மகளிர் கல் லூரி அணி சம்பியனானது.

இந்தப் போட்டியின் இறுதி யாட்டங்கள் கடந்த வெள்ளிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் 20 வயதுப் பெண்க ளுக்கான இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூ ரியை அணி எதிர்த்து இடைக் காடு மகா வித்தியாலயம் மோதியது. இதில் அபாரமாக விளையாடிய இந்து மகளிர் கல்லூரி அணி 15:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வலயச் சம்பி யனாகியது. (108)

விமான சேவை
யாழ்ப்பாணம் ⇌ கொழும்பு
திங்கள், புதன், சனிக்கிழமைகளில்
பதிவுகளுக்கு
கரிகணன்
வடக்கின் அச்சகநாதர்
One way Ticket 7.500/-
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036
077 0111 028 | 029

# ரொனால்டோ உணவு விடுதி கொரோனா மருத்துவமனையா?

## நிர்வாகம் மறுப்பு

கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு சொந்தமான உணவு விடுதியை கொரோனா வைரஸ் சிகிச்சைக்கான மருத்துவமனையாக மாற்றவில்லை என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் இத்தாலியில் ருத்ர தாண்டவம் ஆடி வருகிறது. நாளுக்குநாள் இதனால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், உயிர் இழப்போரின் எண்ணிக்கையும்கூடிக்கொண்டே வருகிறது.

இத்தாலி நாட்டின் முதன்மை கால்பந்து தொடரான 'செரி ஏ' அணியில் விளையாடும் அணிகளில் ஒன்று யுவென்டஸ். இந்த அணியில் உள்ள ஒரு வீரருக்கு கொரோனா வைரஸ் தாக்கம் இருந்தது. இதனால் அந்த அணியில் உள்ள 121 வீரர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

உலகின் தலைசிறந்த வீரரான போர்த்துக்கல்லைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோவும் யுவென்டஸ் அணிக்காக விளையாடி வருகிறார். இதனால் அவர் சொந்த ஊரான மடேய்ராவில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளார்.


இவருக்கு லிஸ்பனில் நட்சத்திர விடுதி உள்ளது. இந்த விடுதியை ரொனால்டோ கொரோனா வைரஸ் சிகிச்சை மருத்துவமனையாக மாற்றிவிட்டார் என்ற செய்தி வெளியானது. இதனை அந்த உணவு விடுதி நிர்வாகம் மறுத்துள்ளது.

இது குறித்து விடுதி நிர்வாகம் தெரிவிக்கையில்;

விடுதியை மருத்துவமனையாக மாற்றவில்லை. இனி மேலும் விடுதியாகத்தான் இருக்கும் - என்றார்.

போர்த்துக்கல்லில் 200க்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



## ஆஸி. - நியூசி ஒருநாள் போட்டி

# மூடிய மைதானத்துக்குள் ஒருவர் மட்டும் அனுமதி

ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் மூடிய அரங்கில் நடைபெற்றது. இந்தப் போட்டியைக் காணப் பார்வையாளர்கள் எவருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. ஆனால் 'யப்பா'வுக்கு மாத்திரம் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. இவரைத் தவிர பார்வையாளர் அரங்கில் வேறெவரும் இருக்கவில்லை.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ரசிகராக விளங்கிய இவரின் இயற்பெயர் ஸ்டீபன் ஹரோல்ட் கேஸ்கொயிங் ஆகும். 1920 ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் இவரின் நடவடிக்கைகள் பலரையும் கவர்ந்திருந்தன.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தீவிர ரசிகரான இவர், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி சிட்னி மைதானத்தில் விளையாடும் போதெல்லாம் சிட்னி கிரிக்கெட் மைதானத்தின் 'ஸ்கோர் போர்ட்' பலகைக்கு எதிர்த்திசையில் அமைந்துள்ள பார்வையாளர் பகுதியின் உயரமான இடத்திலிருந்து போட்டியை கண்டுகளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருப்பார். இவர் உற்சாக கோஷம் ஆஸ்திரேலிய அணி வீரர்களுக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக அமைந்ததுடன், ரசிகர்கள் பலரையும் கவர்ந்திழுக்கும் வண்ணமாக இருந்தது.

இவரின் மறைவுக்கு பின்னர் அவர் வழமையாக இருக்கும் இடம் அவருக்காக ஒதுக்கப்பட்டதுடன், 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் திகதியன்று அவர் அமர்ந்துகொண்டு கோஷமிடும் விதமான அவரின் வெண்கல சிலையொன்றை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை வடிவமைத்தது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக முடிய அரங்குக்குள் பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படாவிடினும்; யப்பா போட்டியை தனியொருவராக கண்டுகளித்திருந்ததாக அனைவரும் இதனை நினைவு கூர்ந்தனர்.

# இந்தியா - தென்னாபிரிக்கா எஞ்சிய 2 போட்டிகளும் நிறுத்தம்




கொரோனா வைரஸ் காரணமாக இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான எஞ்சிய 2 போட்டிகள் நிறுத்தப்பட்டது.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவிருந்தது. இரு அணிகளும் தர்மசாலாவில் மோத இருந்த முதல் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

எஞ்சிய 2 ஆட்டங்கள் லக்னோ மற்றும் கொல்கத்தாவில் நடைபெற இருந்தன. இதற்கிடையே கொரோனா வைரஸ் காரணமாக எஞ்சிய 2 போட்டிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

ரசிகர்கள் இன்றி போட்டியை நடத்த முதலில் திட்டமிட்டனர். பின்னர் தொடரை நிறுத்துவதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது.

தென்னாபிரிக்கா அணி வீரர்கள் லக்னோவில் உள்ள விடுதி அறையில் முடங்கிக் கிடந்தனர். கொரோனா வைரஸ் காரணமாக அவர்கள் எங்கும் செல்லவில்லை. இந்த நிலையில் தென்னாபிரிக்கா அணி தமது நாட்டுக்குச் செல்கின்றனர்.

பணிநிலை வேண்டுகை
கணினி பக்க வடிவமைப்பாளர் (ஆண்/பெண்) Graphics Designer
கணினி தட்டெழுத்தாளர் (ஆண்/பெண்) Computer Typist
இயந்திர இயக்குனர் (ஆண்) Machine Minder
சுத்திகரிப்புப் பணியாளர் (ஆண்/பெண்) Cleaning Staff
16.03.2020 - 20.03.2020 வரை
காலை 10.00 - 2.00 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
விண்ணப்பிக்க விரும்புவோர்
நேரில் வரவும்
கரிகணன்
வடக்கின் அச்சகநாதர்
இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.